Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Dialog டயலொக்

kit

எந்நேரமும் என்னுடன்....

100/=, 400/=, 1000/= விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் மற்றும் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் SIM இணைப்புக்களையும் (Connection) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் சகல தபால் அலுவலக சேவைகள், துரித தபால் சேவைகள் உள்நாட்டு வெளிநாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகளுக்கும்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

உலகின் எப்பாகத்திலிருந்தும் ஒருசில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

Sri Murugan
Tele Communication & Agency
Post Office.
303, K.K.S. Road, Jaffna.
T.P: 021 222 5392,
Fax: 222 3214
E.Mail: srimurugan@eureka.lk

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 தை 19 ஹிஜ்ரி 1426 துல்ஹஜ் 31 (01.02.2006) புதன்கிழமை இதழ் 124

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மேலும் 6 பணியாளர்கள் கடத்தல்!

## கிளிநொச்சி வந்தோரை காணவில்லை

மட்டக்களப்பு —

மட்டக்களப்பிலிருந்து வவுனியா நோக்கி பயணம் செய்த தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மேலும் ஆறு பணியாளர்கள் பயணம் செய்த வாகனத்துடன் காணாமற் போயிருப்பதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நேற்று அறிவித்தது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடத்திவரும் முன்பள்ளி மேம்பாட்டு நிலையத்தின் வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பாளர் காசிநாதர் கணேசலிங்கம், மண்முனை வடக்கு முன்பள்ளிப்பிரதேச இணைப்பாளர் டோஜினி, மண்முனை கிழக்கு முன்பள்ளி ஆசிரியை சீதாலட்சுமி, மண்முனை கிழக்கு முன்பள்ளி ஆசிரியை சித்திரவேல் சிவமதி, வட்டக்கச்சியைச் சேர்ந்த வாகனச் சாரதி தங்கராசா ஆகியோரே கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று கிளிநொச்சியில் நடைபெறவிருந்த முன்பள்ளி ஆசிரியர்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் கொன்ஸ்டபிள் காயம்!

திருகோணமலை —

திருகோணமலை - பச்சனூரில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் படுகாயமடைந்தார்

நேற்றுக்காலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் ரஞ்சித் ரத்னாயக்க (வயது 30) என்ற கொன்ஸ்டபிளே படுகாயமுற்றவராவார்.

பச்சனூர் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்புக் கடமையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பணியாளர்கள் கடத்தப்பட்டதற்கு புனர்வாழ்வுக்கழகம் கண்டனம்!

கொழும்பு —

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ...து பணியாளர்கள் மட்டக்களப்பிலி...து பயிற்சி ஒன்றுக்காக வவுனியா ...ன்றபோது கடத்தப்பட்டமை தொடர்... கொழும்பில் நேற்று தமிழர் புனர்...ழ்வுக்கழக நிகழ்ச்சித் திட்டப் பணிப்...ளர் செய்தியாளர் மாநாடு ஒன்றை ...த்தினார்.

கடத்தப்பட்டவர்களை விடுதலை ...யும் பணியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தற்போது முயற்சித்து வருகிறது. இதற்கமைய இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, சர்வதேச அதிகாரிகள், மனித உரிமை அதிகாரிகள், வெளிநாட்டுத் தூதரகங்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சமாதான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களிடம் மேற்படி விடயம் குறித்து தெரிவித்துள்ளதுடன், சம்பந்தப்பட்டவர்களின் விடுதலைக்காகவும் அவர்களின் நலனுக்காகவும் கோரிக்கை விடுத்துள்ளோம் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இப்படியான எந்தச் சம்பவமும் வெலிக்கந்த சோதனைச் சாவடிக்கு அருகில் நடந்ததாகக் கூறப்படுவதை அரசாங்கம் மறுத்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து அந்தப் பகுதியில் பொலிஸாரிடமோ அல்லது இராணுவத்தினரிடமோ எந்தவித முறைப்பாடும் பதிவுசெய்யப்படவில்லை (12 ஆம் பக்கம் பார்க்க)

## கோப்பாய் இராணுவ முகாமில் பெண்கள் துன்புறுத்தலா?

### அபயக்குரல் கேட்டதாக முறைப்பாடு

யாழ்ப்பாணம் —

கோப்பாய் பகுதியில் உள்ள இராணுவ முகாமில் பெண் ஒருவர் துன்புறுத்தப்படும் அபயக்குரல் சத்தம் கேட்டதாக அந்த வீதியால் சென்ற மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

கோப்பாய் - கைதடி வீதியில் அமைந்துள்ள இராணுவ முகாமில் பெண்கள் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்டதால் எழுந்ததாகக் கருதப்படும் அபயக்குரல் கேட்டதாக வீதியால் சென்ற மக்கள் தன்னிடம் தெரிவித்ததாகவும் - இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## பணியாளர்கள் கடத்தல்; அமெரிக்கா கண்டனம்!

கொழும்பு —

...டத்தின் வெலிக்கந்த பகுதியில் கடத்...

## எந்தநேரத்திலும் இலங்கைக்கு உதவி வழங்குவதற்குத் தயார்!

# ணியாளர்கள் கடத்தல்; அமெரிக்கா கண்டனம்!

ழும்பு —

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ியாளர்கள் கடத்தப்பட்டமை தொடர் இலங்கை அரசாங்கம் விரை விசாரணைகளை நடத்தவேண் என்று அமெரிக்கா வேண்டு விடுத்துள்ளது.

ாங்கைக்கான அமெரிக்கத் ம் கொழும்பில் நேற்று விடுத் அறிக்கையில் -

மிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ியாளர்கள் பொலனறுவ மாவட் டத்தின் வெலிக்கந்த பகுதியில் கடத் தப்பட்டுள்ளதாக வெளியான செய்தி கள் தொடர்பாக அமெரிக்கத் தூதரகம் வருத்தம் கொள்கிறது.

இந்தச் சம்பவம் குறித்து தொடர் புடைய அதிகாரிகள் விரைவான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கத் தூதர கம் வேண்டுகோள் விடுக்கிறது.

ஜெனிவாவில் போர்நிறுத்த அமு லாக்கம் குறித்த பேச்சுக்கள் நடைபெறப் போகும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# னந்தசங்கரி தலைமையில் ந்திய அரசியல் கட்சி அமைப்பு!

ம்பு —

தலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் தமிழ்க் ளை ஒன்றிணைத்து புதிய கட்சி ஒன்றை உருவாக்கும் முயற்சிகள் ழும்பில் தீவிரம் பெற்றிருப்பதாக இந்திய பத்திரிகை ஒன்று செய்தி வெளி டுள்ளது.

அகில இலங்கை தமிழர் விடுதலைக் கட்சி என்ற பெயரில் ஆனந்தசங்கரி த்தலைவராகக் கொண்டு இந்தக் கட்சி ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிய கிறது.

இந்தக் கட்சியில் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்.வரதர் அணி ஆகியவையும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ள அதேவேளை, ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப் னர்கள் பலரும் இந்தக் கட்சியில் இணைந்துகொள்ளலாமென எதிர்பார்க் படுகிறது.

இதேவேளை, இந்தக் கட்சியுடன் இணைய ஈ.பி.டி.பி விரும்பவில்லை னவும் தெரியவருகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# எந்தநேரத்திலும் இலங்கைக்கு உதவி வழங்குவதற்குத் தயார்!

## இந்திய விமானப்படைத் தளபதி





கொழும்பு —

எந்தவொரு தருணத்திலும் இலங்கைப் படைகளுக்கு உதவ இந்திய விமானப்படை தயாராக இருப்பதாக - இந் திய விமானப்படைத் தளபதி எயர் சிப் மார்ஷல் சுசிந்திர பால் தியாகி உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து பேச்சு நடத் தியபோதே அவர் இவ்வாறு உறுதியளித்தாகத் தகவல்கள் தெரிவித்தன.

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக நேற்று முன்தினம் கொழும்பு வந்த இந்திய விமானப்படைத் தள பதி எயர் சிப் மார்ஷல் சுசிந்திரபால் தியாகி - நேற்று ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் முப்படைத் தளபதிகளைச் சந் தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நேற்று மாலை சந்தித்த எயர் சிப் மார்ஷல் தியாகி இரு தரப்பு இராணுவ ஒத்துழைப்பை அதிகரித்துக் கொள்வது தொடர்பாக விரி வான பேச்சுக்களை நடத்தியதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, நேற்றுக்காலை விமானப்படை தலை மையகத்துக்குச் சென்ற அவருக்கு அணிவகுப்பு மரி யாதை வழங்கப்பட்டது. இலங்கை விமானப்படைத் தள பதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா மற்றும் விமானப் படை இயக்குனர் சபை (12 ஆம் பக்கம் பார்க்க)




ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்....

EXPOAIR

021-222 3891, 222 6297, 077-2349999, 011-2272952/3, 011 - 2360290/1

email:jaffna@expoavi.com, reservations@expoavi.com.

*your friend in the skies...*

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமாசேவை...



# படையினரால் ஏற்படும் பிரச்சினைகள்; உடனுக்குடன் தெரியப்படுத்த வேண்டும்

## யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டில் இராணுவத்தால் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் குறித்து உடனுக்குடன் தமக்கு தெரியப்படுத்தினால் அதற்குரிய நடவடிக்கைகளை விரைவாக எடுக்க முடியும் என யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி சந்திரசிறி தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் செயற்பாடுகள் குறித்து நேற்று முன்தினம் பலாலியில், மனித உரிமைகள் அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரச அதிபர் ஆகியோருடனான சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் - குடாநாட்டு மக்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் சோதனைக் கெடுபிடிகள், சுற்றிவளைப்பு தேடுதல்கள் மற்றும் வீதிச்சோதனைகளின்போதும் பொதுமக்களின் அடையாள அட்டைகள், கையடக்க தொலைபேசிகள் பறிக்கப்படுதல் குறித்து இராணுவத் தளபதியின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

அத்துடன் பெண்கள் தனித்து வீதிகளில் செல்லும் வேளைகளில் இராணுவத்தினர் வழிமறித்து சோதனையிடுதல், அவர்களுடன் பாலியல் சேட்டைகளில் ஈடுபடுதல் நிறுத்தப்பட வேண்டும்.

இராணுவத்தினரால் ஒருவர் கைது செய்யப்பட்டால் கைது செய்து 48 மணித்தியாலங்களுக்குள் கைதானவர் பற்றிய தகவல்களை பெற்றோருக்கு தெரியப்படுத்தவேண்டும் என்றும், கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நபரை அவரது உறவினர்கள் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

குடாநாட்டுக் கடலில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருக்கும் தடைகள் மற்றும் இராணுவ காவலரண்கள் அமைத்தல், புதிய முகாம்கள் அமைப்பதற்காக பனை, தென்னை போன்ற பயன்தரும் மரங்களை அழிப்பது உடன் நிறுத்தப்படவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த இராணுவத் தளபதி -இராணுவத்தினரால் ஒருவர் கைதுசெய்யப்பட்டால், தாக்கப்பட்டால், கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்படின் உடனடியாக 021 222 9693, 021 222 2001, 021 222 2271 ஆகிய இலக்கங்களில் ஏதாவது ஒரு இலக்கத்துடன் தொடர்பு கொண்டால் அவற்றுக்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படும். இராணுவத்தினர் தாக்கினாலோ அல்லது உடமைகளை பறித்தாலோ குறித்த இராணுவத்தினரையோ அவரது படைமுகாம் பற்றிய தகவல்களை தெரியப்படுத்தினால் குறித்த இராணுவத்தினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

இந்தச் சந்திப்பில் இராணுவத் தரப்பில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திர சிறி, மற்றும் இராணுவ அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

பொது அமைப்புக்கள் சார்பாக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் விக்னேஸ்வரன், மனித உரிமைகள் ஆகைக்குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பதிகாரி றோகித பிரியதர்சன, மனிதநேய அமைப்புகளின் ஒன்றித் தலைவர் பரமநாதன், யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் மற்றும் மனித உரிமைகள் அமைப்புப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கற்றலுக்கான இயல்புநிலை ஏற்படும்வரை கல்விச் செயற்பாடுகளை புறக்கணிப்போம்

## முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம் —

புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள சரத்துக்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்தி மாணவர்களும், மக்களும் எந்தவித அச்சுறுத்தல் மற்றும் மிரட்டல்கள் இன்றி இயல்புநிலையை அரசும், படையினரும் ஏற்படுத்தும்வரை கற்றல் செயற்பாடுகளை தொடர்ந்தும் தாம் புறக்கணிக்கப் போவதாக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடமாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தைப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து என்றும் இல்லாத வகையில் பல்கலைக்கழக வளாகத்தைச் சூழ ஏராளமான இராணுவத்தினரை குவித்ததுடன், மாணவர்கள் மீதும் பல கெடுபிடிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அதனைக் கண்டித்து கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் தலைமையில் போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழு அலுவலகம் நோக்கி அமைதியாக நடத்தப்பட்ட ஊர்வலத்தின்போது இராணுவத்தினர் துணைவேந்தர், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் மீதும் கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தினர். அத்துடன் மறுநாள் பல்கலைக்கழக வளவினுள் புகுந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்து மாணவர்கள், விரிவுரையாளர்களை கண்மூடித்தனமாக தாக்கினர். இதனால் கல்விச் செயற்பாடுகளை சுமுகமாக முன்னெடுக்கக்கூடிய சூழலின்றிக் காணப்பட்டது.

இதன் காரணமாக கற்றல் செயற்பாடுகளை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டோம். ஆனாலும் கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாகியும் இராணுவமோ, அரசாங்கமோ எவ்வித சாதகமான முடிவையும் எமக்கு ஏற்படுத்தித் தரவில்லை. இதற்கு மாறாக பல்கலைக்கழக சூழலில் இராணுவம் குவிக்கப்பட்டு, தொடர்ந்தும் இராணுவ கெடுபிடிகள் அதிகரித்த வண்ணமே உள்ளன.

இதுதவிர பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியிருக்கும் தனியார் வீட்டு உரிமையாளர்களின் வீடுகளுக்கு சென்ற படைப்புலனாய்வுத் துறையினரும், ஈ.பி.டி.பியினரும் வீடுகளில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தங்குமிடம் கொடுக்கக் கூடாது என்று மிரட்டியும் வருகின்றனர்.

இதனால் பல ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு தங்குமிடம் இன்மையால் பல்கலைக்கழக கல்வியை தொடரமுடியாத சூழல் காணப்படுகிறது.

இந்த நிலையில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள விடயங்களை அரசாங்கம் நடைமுறைப் படுத்தி மாணவர்களினதும், மக்களினதும் இயல்பான வாழ்வுக்கு அரசும், இராணுவமும் வழிவகுக்கவேண்டும். அதுவரை எமது பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகளை தொடர்ந்தும் புறக்கணிப்பதென முடிவு செய்துள்ளோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சங்கானை ஞானவைரவர் மணவாளக் கோல விழா

சங்கானை —

சங்கானை நிகரை ஞானவைரவர் ஆலயத்தின் மணவாளக் கோல விழா இன்று காலை 9 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகி -

நண்பகல் 12 மணிக்கு வசந்த மண்ட பூசை இடம்பெற்று வைரவர் பெருமான் வீதியுலா வருவார். தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளது. (47)


நாதன்ஸ் யாழ்ப்பாணம்

அல்டிமேட் ஸ்ரார் அஜித், லைலா, விவேக், பிரகாஸ்ராஜ் நடித்த

பரமசிவன்



அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க நேரம் மாற்றப்பட்டுள்ளது.

காட்சிகள்;- 10.30, 2.30 (புதிய நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்




தயாரிப்பு - S.A சந்திரசேகர் இசை -வித்தியாசாகர்

(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு)

காட்சிகள்;- 10.30, 1.30, 4.30, 7.30. (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்




காட்சி : பு.நே. 10.30, 2.15 மட்டும். ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நிறைஞ்சலாஸ் சங்கானை

இன்றுமுதல்...

சத்தியராஜ் இருவேடம், சங்கவி, மற்றும் பலர் நடித்த

அய்யர் I.P.S

காட்சிகள் 11.00,2.30,5.30 (பு.நே)

## சிறு விளம்பரம்

### கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் பிரபல இடத்தில் நவீன சந்தைக்கு அருகாமையில் கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு - இல.89, சீனிவாசகம்வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். T.P - 0776967448 (2179)

### வீடு வாடகைக்கு

பொஸ்கோ கல்லூரிக்கு அண்மையாக யாழ்.கோவில் வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு- 0777 3126902, 0777 3221413. (சி.5060)


# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம் —

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு இன்று தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக நல்லூர் பிரதேசசபை உப அலுவலக பொறுப்பதிகாரி தி.தவராசா தெரிவித்தார்.

தடுப்பூசி ஏற்றப்படவுள்ள இடங்கள்-

காலை 8 மணிதொடக்கம் 9 மணிவரை - தாவடிச்சந்தி, காளி கோவில் ஒழுங்கை விக்னேஸ்வரா பாலர் பாடசாலை, கோண்டாவில் ரேசன்வீதி முதலாம் ஒழுங்கை, செருக்கபுரம் ஒழுங்கை செந்தில் கடைக்கு அருகாமை, இருபாலை வீதி குவேந்திரநாதன் வீடு.

காலை 9.05 மணி தொடக்கம் 10.05 வரை - தாவடிச்சந்தி கோண்டாவில் வீதி முதலாம் ஒழுங்கை, இருபாலை வீதி கலட்டி ஒழுங்கை ஆரம்பிக்கும் இடம், குலக்கரை ஒழுங்கையும் இருபாலை வீதியும் இணையும் இடம், செருக்கபுரம் ஒழுங்கை, செல்வநாயகம் வீதி.

10.10 மணி தொடக்கம் 11.10 மணி வரை ஆசாரியார் ஒழுங்கை, இருபால்லை வீதி காளிகோவில், குலக்கரைவீதி ஜெயந்திரன் வீட்டுக்கு அருகில், செருக்கபுரம் ஒழுங்கையும் பொற்பதி வீதியும் சந்திக்கும் இடம், இருபாலை வீதி அற்புத விநாயகர் சன சமூகநிலையம்.

11.15 மணி தொடக்கம் 12.15 வரை உப்புமடம் ஒழுங்கை, பாடசாலை ஒழுங்கைக்கு எதிராக உள்ள ஒழுங்கை, ஸ்ரேசன் வீதி மூன்றாம் கை ஒழுங்கை, பொற்பதி வீதி உபதபாற் கந்தோர் அருகில், பலாலிவீதி.

2 மணி தொடக்கம் 3 மணி வரை றெனிஸ், ஐஸ்கிறீம் நிறுவனம் அமைந்துள்ள ஒழுங்கை, கோவில் வீதி, கோண்டாவில் ஸ்ரேசன் வீதி சமுர்த்தி உத்தியோகத்தர் வீடு, இருபாலை வீதி இரண்டாம் வலதுபக்கக் கை ஒழுங்கை, எஸ்.கே.ஜிம் இருபாலை வீதி.

3.05 மணி தொடக்கம் 4.05 மணி வரை வேதபாராயணர் சன சமூகநிலையம், கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம், ஸ்ரேசன் வீதி கால்நடை உப அலுவலகம் கோண்டாவில், இருபாலை வீதி இரண்டாம் வலதுபக்க கை ஒழுங்கை காளிகோவில், இருபாலை வீதி பழனி ஆண்டவர் கோவில்.

மேற்குறிப்பிட்ட இடங்களில் உரிய நேரத்துக்குச் சென்று தமது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## கட்டைவேலி —நெல்லியடி ப.நோ.கூ.சங்கம், கரவெட்டி.

வரையறுக்கப்பட்டது பதிவு இல. 1553

### பகிரங்க அறிவித்தல் மூலம் கணக்குகளை உறுதிப்படுத்தலும் சீர்செய்தலும்

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் கணக்குப் புத்தகங்களில் நீண்ட காலமாக (10வருடங்களுக்கு மேல்) கோரப்படாததும் விபரமற்றதுமான செல்மதி, வருமதி மீதிகள் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேற்படி வருமதி, செல்மதிகளுடன் தொடர்புடையவர்கள், சங்கத்தில் எதிர்வரும் 2006 பெப்ரவரி 24ம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொண்டு செல்மதி, வருமதிகளை உறுதிப்படுத்தாதவிடத்து இம் மீதிகளைச் சங்கப் புத்தகங்களில் சீர்செய்வதற்கு வேண்டிய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்,
செ.கெங்காதரன்
கட்டைவேலி-நெல்லியடி
ப.நோ.கூ. சங்கம்
கரவெட்டி.

(C/5062)

## துயர் பகிர்கின்றோம்

### கந்தையா கணேசலிங்கம்

(திட்டப்பணிப்பாளர், கெயர் சர்வதேசம் - முல்லைமாவட்டம்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துடன் கெயர் நிறுவனத்தின் செயற்பாடுகளில் நீண்ட காலமாக தொடர்புபட்டு மிகவும் சிறப்பான முறையில் பணிபுரிந்து வந்தவரும், துன்பப்பட்ட மக்களின் துயர்துடைப்பு பணிகளில் தன்னாலான நிறைவான பங்களிப்பை வழங்கியவருமான கந்தையா கணேசலிங்கம் அவர்கள் 26.01.2006 ஆம் திகதி காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம்.

இவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்கள்
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்

(சி.5063)

# தூதரகங்களின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப செயற்படும் தலைவர் தேவையில்லை!

## மகிந்த மீது ஹெல உறுமய பாய்ச்சல்





கொழும்பு—

இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதரகங்களின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப செயற்படும் மக்கள் தலைவர் நாட்டுக்குத் தேவையில்லை என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஜாதிக ஹெல உறுமய கடுமை யாகச் சாடியுள்ளது.

குருணாகல மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலிய ரத்னதேரர் கூறியதாவது -

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துவதை எதிர்க்கவில்லை. எனினும், பயங்கரவாதிகளுக்கு அடிபணிந்து, அவர்களுக்குத் தேவையானவாறு பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதையே நாம் எதிர்க்கிறோம்.

சில தூதரகங்களின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப செயற்படும் மக்கள் தலைவர் நாட்டிற்குத் தேவையில்லை.

அன்ரன் பாலசிங்கம் லண்டனிலிருந்து கொழும்பு வந்து, விமானப் படையினரின் பாதுகாப்புடன் இங்கிருந்து கிளிநொச்சிக்கு செல்ல முடியுமாக இருந்தால், அங்கிருந்து முல்லைத்தீவுக்குச் செல்ல முடியுமாக இருந்தால், ஏன் இலங்கையிலிருந்து பேச்சு வார்த்தைகளை நடத்த முடியாது?

எங்களின் சில தலைவர்களால் இன்று எமது நாட்டை வெளிநாட்டு தூதுவராலயங்களே நடத்துகின்றன. தங்களின் நாட்டைப் பற்றி நேரடியாகக் கருத்துத் தெரிவிக்க முடியாத பயங்கரவாதிகளுக்கு 'பயங்கரவாதிகள்' என்று நேரடியாகக் கூறமுடியாத தலைவர் இருக்கும் அரசாங்கத்துக்கு முட்டுக்கொடுக்க நாம் தயாரில்லை.

தூதுவராலயங்களின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப செயற்படும் மக்கள் தலைவர்கள் நாட்டுக்கு அவசியமில்லை. எந்தவொரு தலைவர் மீதும் நம்பிக்கை வைக்காதீர்கள். மக்கள் சக்தி மீது நம்பிக்கை வையுங்கள் எனத் தெரிவித்தார்.

-ஆளும் கட்சி தரப்பில்-

# கொழும்பு மேயர் பதவிக்கு வாசுதேவ நிறுத்தப்படலாம்!

கொழும்பு—

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது கொழும்பு மாநகர மேயர் பதவிக்கான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராக - புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் வாசுதேவ நாணயக்கார நிறுத்தப்படக் கூடும் எனத் தெரியவருகிறது.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்த வாசுதேவ நாணயக்கார, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அண்மைய ஆலோசனைக் கூட்டத்தில் தமது பெயரும் பரிசீலிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

எனது பெயரை இடதுசாரிக் கட்சிகள் முன்மொழிந்துள்ளன. இருப்பினும் எமது புதிய இடதுசாரி முன்னணிக் கட்சி இந்த விடயத்தில் இறுதி முடிவெடுக்கும் எனத்தெரிவித்தார்.

அதேவேளை - துணை மேயராகவுள்ள அஸாத் அலி தனக்குப் போட்டியாளர் எவரும் இல்லை என்று கூறிவருவது குறிப்பிடத்தக்கது. ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் முன்னாள் மாநகர மேயர் ஓமல் காமில் போட்டியிடக்கூடும் என்றும் தெரியவருகிறது. (01)

## வீரவன்ச வீட்டருகே நடமாடிய கடற்படைச் சிப்பாய் கைது!

கொழும்பு—

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய விமல் வீரவன்சவின் வீட்டுக்கு அண்மையில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிக் கொண்டிருந்ததாக தெரிவித்து கடற்படையைச் சேர்ந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 22ஆம் திகதி நண்பகல் 12.05மணியளவில் புறக்கோட்டைப் பகுதியில் ஆனந்த பாலிகா மாவத்தையில் அமைந்துள்ள விமல் வீரவன்சவின் வீட்டுக்கு அருகில் சந்தேகத்துக்கிடமான முறையில் இவர் நடமாடிக் கொண்டிருந்ததாகவும், அவரிடம் விசாரணைகளை மேற்கொண்ட போது, முறையான விளக்கங்களை தெரிவிக்கத் தவறியதன் காரணமாக அவரைப் பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகவும் தெரியவருகிறது.

மேற்படி நபர் களுத்துறையைச் சேர்ந்த ரசிக்கசாமர சம்பத் என்றும், 5ஆண்டு காலமாக கடற்படையில் பணிபுரிந்த இவர், அங்கிருந்து தப்பி வந்த பின்னர் சேவைக்குச் செல்லவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கும்படி கங்கொடவில நீதியரசர் பத்மினி என். ரணவக்க உத்தரவிட்டார்.

# 11 புதிய பதவிகளுடன் ஐ.தே.க. மறுசீரமைப்பு

கொழும்பு—

ஐக்கிய தேசியக் கட்சியில் 11 புதிய பதவிகள் உருவாக்கப்பட்டு மறுசீரமைக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட தவிசாளர் ஒருவர், 10 உப தவிசாளர்கள் மற்றும் 5 பிரதிச் செயலாளர்கள் எனப் புதிய பதவிகளுடன் கட்சியை மறுசீரமைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு அனுமதியளித்துள்ளது.

இதற்கமைய ஐக்கிய தேசியக் கட்சிக்கு தற்போதிருக்கும் 5 உப தவிசாளர் பதவிகளுடன் 11 புதிய பதவிகள் சேர்க்கப்படுகின்றன. இந்தப் பதவிகள் உட்பட கட்சியின் அனைத்து பதவிகளையும் கட்சியின் செயற்பாட்டு அரசியல்வாதிகளாலும் ஏற்கக் கூடிய வகையில், கட்சியின் யாப்பைத் திருத்துவதற்கும் செயற்குழுவின் அனுமதி கிடைத்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட தவிசாளர் பதவியை கருஜயசூரியவுக்கு வழங்குவதுடன் ஏனைய பதவிகளுக்காக இதுவரை எவரும் தெரிவு செய்யப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கட்சி மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் கட்சியின் அரசியல்சபை 15 அங்கத்தவர்களைக் கொண்டதாகவும், அவர்கள் கட்சியின் செயற்குழுவுக்குப் பதிலளிக்க கடமைப்பட்டவர்களாக யாப்பின் மூலம் உறுதிப்படுத்தவும், தேசிய நிறைவேற்றுச் சபையில் தற்போதிருக்கும் 5 ஆயிரம் உறுப்பினர் தொகையை 1500 ஆகக் குறைப்பதற்கும் செயற்குழு அனுமதியளித்ததாக திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

## உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க கோரிக்கை

கொழும்பு—

வடகிழக்கிற்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்குமாறு தேர்தல் ஆணையாளரிடம் வலியுறுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இது குறித்துத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த பின்னர் அவற்றுக்கான தேர்தலை ஒத்திவைக்குமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பு - தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தலை ஒத்திவைக்குமாறு நாடாளுமன்றத்தில் சிறப்புரை நிகழ்த்தவிருப்பதாகவும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

எனினும் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனைச் சந்தித்த பின்னரே முடிவு செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## எஸ்.பியின் எம்.பி. ஆசனத்துக்கு ரேணுகா ஹேரத் நியமனம்

கொழும்பு—

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த எஸ். பி.திஸநாயக்கவின் நாடாளுமன்ற ஆசனத்துக்கு ரேணுகா ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான வாத்தமானி அறிவித்தலை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க வெளியிட்டுள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறையில் எஸ்.பி திஸநாயக்க இருப்பதால், நாடாளுமன்ற அமர்வுகளில் அவர் கலந்து கொள்ளவில்லை. நாடாளுமன்றக் கூட்டங்களில் 3 மாதங்களுக்கு மேல் தொடர்ந்து பங்கேற்காததால் எஸ்.பி. திஸநாயக்க தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்துள்ளார்.

இதையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ரேணுகா ஹேரத் அந்த ஆசனத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

1977 ஆம் ஆண்டு வலப்பனை தொகுதியில் போட்டியிட்டு ரேணுகா ஹேரத் வெற்றி பெற்றார். 1989 ஆம் ஆண்டு முதல் 1994 ஆம் ஆண்டு வரை சுகாதாரம் மற்றும் மகளிர் விவகாரங்களுக்கான அமைச்சராகவும் ரேணுகா ஹேரத் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

## சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் சபை இன்று கூடும்

கொழும்பு—

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் சபை மற்றும் அனைத்துத் தொகுதி அமைப்பாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு இன்று நடைபெறவுள்ளது.

மகிந்தவின் அலரிமாளிகையில் இன்று மாலை 7.30 மணிக்கு இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவால் இந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வது தொடர்பான பணிகளை வேட்பாளர் சபை எற்கனவே நிறைவு செய்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

## இனிமேல் கடவுச்சீட்டுக்கள் 10 வருடங்கள் செல்லுபடியாகும்!

கொழும்பு—

புதிதாக வழங்கப்படவுள்ள கடவுச்சீட்டுக்கள் தொடர்ந்து 10வருடங்களுக்குச் செல்லுபடியாகும் என்று குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் அபயக்கோன் தெரிவித்தார்.

பிரதேச செயலகங்களுக்கூடாக கடவுச்சீட்டுக்கள் வழங்குவது தொடர்பாக - ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரதேச செயலகங்களினூடாக கடவுச் சீட்டுக்கள் வழங்கப்படுவதற்கு மேலதிகமாக மூன்று பிரதேச செயலகங்கள் நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி திணைக்களத்தின் மூன்று பிராந்திய அலுவலகங்கள் கண்டி, மாத்தறை, அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்படவுள்ளன. புதிய செயற்திட்டத்தின் கீழ் கடவுச்சீட்டை பெறுவதற்கு விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படும் புகைப்படம் மற்றும் அதற்கு இடப்படும் விண்ணப்பதாரியின் கையொப்பம் ஆகியவற்றை உறுதி செய்யும் அதிகாரம் அரசாங்க நிறைவேற்று அதிகாரிகள், சமாதான நீதிவான்கள், முப்படை அதிகாரிகள், சட்டத்தரணிகள், பாடசாலை அதிபர்கள்,சமுர்த்தி உத்தியோகத்தர்கள், தபால் அதிபர்கள், கோட்ட அதிகாரிகள் மற்றும் சமூகசேவை உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும்.

இதற்குப் பின்னர் கடவுச்சீட்டு பெறுதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் - விண்ணப்பதாரி வசிக்கும் பிரதேசத்தை சேர்ந்த குறிப்பிட்ட அதிகாரி மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தவறுதலான சூட்டில் சிப்பாய் உயிரிழப்பு!

கொழும்பு—

பொலநறுவ மாவட்டத்திலுள்ள குடாஓயா காட்டுப் பகுதியில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த சிப்பாய் ஒருவர் தவறுதலான துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் முற்பகல் 5 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யு.எல். தனுஷ்க (வயது30) என்ற இராணுவச் சிப்பாயே உயிரிழந்தவராவார்.

குடாஓயா காட்டுப்பகுதியில் ஒரு தொகுதி படையினர் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பொலநறுவ பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## புலிகள் மீதான தாக்குதலை கருணாகுழு நிறுத்தியதாம்!

கொழும்பு—

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை நிறுத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாக கருணா குழு அறிவித்துள்ளதென இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சமாதான முயற்சிகளைக் கருத்திற் கொண்டே இந்த நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் கருணாகுழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜெனீவாவில் பேச்சுக்களை நடத்தத் தீர்மானித்ததையடுத்து புலிகள் மீதான தாக்குதல்களை நிறுத்தும்படி கருணா குழுவுக்கு - இலங்கை அரசு அழுத்தம் கொடுத்திருப்பதாக இந்திய செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

சமாதானச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படும் எனக் கருதியே அரசு இந்த உத்தரவை வழங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

## அம்பாந்தோட்டை நிதி மோசடி; சட்டத்தை மீறிய பொலிஸார்!

கொழும்பு—

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீதான அம்பாந்தோட்டை சுனாமி நிதி மோசடி வழக்கில் குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார் குற்றவியல் சட்டத்தை மீறிச் செயற்பட்டுள்ளனர் என்று உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

தம் மீதான அம்பாந்தோட்டை சுனாமி நிதிமோசடி வழக்கை எதிர்த்து மகிந்த ராஜபக்ஷ நீதிமன்றில் முறையீட்டு மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு பிரதம நீதியரசா சரத் என்.டி.சில்வா, நீதிபதிகள் சிரானி திலகவர்த்தன, என்.இ.திசநாயக்க ஆகியோர் அடங்கிய குழு முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக எதுவித எழுத்து பூர்வமான சாட்சியமும் இல்லாத நிலையில், அரசியல் அழுத்தங்களுக்கமைய பொலிஸார் செயற்பட்டிருப்பதாக நீதித்துறையினர் தெரிவித்தனர்.

மேலும் அம்பாந்தோட்டை நிதி மோசடி வழக்கு மீதான உத்தரவு நிறுத்தி வைக்கப்படுவதாகவும் நீதிமன்றம் தெரிவித்தது.

## வி.பி கிண்ண முக்கோணத் தொடர்

# 5 விக்கெட்டுக்களால் தென்னாபிரிக்கா இலங்கை அணியை தோற்கடித்தது

பேர்த்

அவுஸ்ரேலியாவில் நடைபெறும் முத்தரப்பு ஒருநாள் தொடரில்-நேற்று பேர்த் நகரில் நடைபெற்ற ஒன்பதாவது போட்டியில் 5 விக்கெட்டுக்களால் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றது.


நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. முபாரக் - ஜெயசூர்ய ஜோடி தொடக்க வீரர்களாகக் களமிறங்கியது. இருவரும் அபாரமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். ஜெயசூர்ய எப்போதும் போலவே அதிரடியாக ஆடினார். இந்தநிலையில் அணியின் ஸ்கோர் 94 ஆக இருக்கும்போது முதலாவது விக்கெட்டாக முபாரக் - 5 பவுண்டரிகள் அடங்கலாக 31 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் - சிமித்தின் பந்தில் போல்டானார்.

இவரைத் தொடர்ந்து ஜெயசூர்யவுடன் சங்ககார ஜோடி சேர்ந்தார். ஜெயசூர்ய அரைச் சதத்தைக் கடந்து சிறப்பாக ஆடிக்கொண்டிருந்தார். அப்போது அணியின் ஸ்கோர் 137 ஆக இருக்கும்போது - சிமித்தின் பந்துவீச்சில் பிறின்ஸிடம் பிடிகொடுத்து ஜெயசூர்ய ஆட்டமிழந்தார். அவர் 65 பந்துகளில் 9 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 86 ஓட்டங்களை விளாசியிருந்தார்.

தொடர்ந்து சங்ககாரவுடன் ஜோடி சேர்ந்த ஜெயவர்த்தன ஒரேயொரு ஓட்டத்தை மட்டும் பெற்றநிலையில் - சிமித்தின் பந்தில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.







அடுத்து சங்ககாரவுடன் அணித் தலைவர் அத்தபத்து இணைந்தார். அணியின் ஸ்கோர் 144 ஆக இருக்கும்போது லாங்வெல்றின் பந்துவீச்சில், கெம்பிடம் பிடிகொடுத்து சங்ககார ஆட்டமிழந்தார். அவர் 16 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

இதனைத் தொடர்ந்து அத்தபத்துவுடன் ஆர்னோல்ட் ஜோடி சேர்ந்தார். இருவரும் மெதுவாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். இந்த நிலையில் ஸ்கோர் 159 ஐ எட்டியபோது அத்தபத்து 7 ஓட்டங்களுடன் வோத்தின் பந்தில், ரூடொல்பிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக ஆர்னோல்டுடன் டில்ஷான் ஜோடி சேர்ந்தார். டில்ஷான் ஓரளவுக்கு சிறப்பாக ஆடினார். இந்தநிலையில் ஸ்கோர் 179 ஆக இருக்கும்போது - 46 பந்துகளில் 1 பவுண்டரியுடன் 15 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஆர்னோல்ட் - பொலக்கின் பந்தில் கெம்பிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய வாஸ் ஓட்டமெதையும் பெறாத நிலையில் ரன் அவுட்டானார்.

இதனைத் தொடர்ந்து களமிறங்கிய குலசேகர 1 ஓட்டத்தையும், பண்டார 11 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

இறுதியாக டில்ஷானுடன் ஜோடி சேர்ந்து முரளிதரன் ஆடினார். ஆனால் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த டில்ஷான் - ஸ்கோர் 222ஐ எட்டியநிலையில் 37 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது எதிர்பாராத விதமாக ரன் அவுட்டனார். இதனால் இலங்கை அணி 47.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. முரளி ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழக்காமல் களத்தில் நின்றார்.

பந்துவீச்சில் சிமித் 3, பொலக் 2, லாங்வெல்ற், வோத் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து சுலபமாக இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்க அணியின் சிமித் - டிப்பென்னர் ஜோடி சிறப்பாக அடித்தளத்தை இட்டுக் கொடுத்தது. அணியின் ஸ்கோர் 84 ஐ எட்டிய நிலையில் 52 பந்துகளில் 4 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 41 ஓட்டங்களைப் பெற்றிருந்த சிமித் - முரளியின் பந்தில் சங்ககாரவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து டிப்பென்னருடன் ரூடொல்ப் ஜோடி சேர்ந்தார். ஸ்கோர் 164 ஆக இருக்கும்போது பண்டாரவின் பந்தில் ஸ்டம்ப் செய்யப்பட்டு ரூடொல்ப் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து கிப்ஸ், டிப்பென்னருடன் ஜோடி சேர்ந்தார். இந்த நிலையில் அணி மேலதிகமாக ஓட்டமெதையும் பெறாத நிலையில், சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த டிப்பென்னர் முரளியின் பந்தில் சங்ககாரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து கிப்ஸுடன், பௌச்சர் ஜோடி சேர்ந்தார். இந்தநிலையில் கிப்ஸ் 4 ஓட்டங்களுடன் முரளியின் பந்தில் போல்டானார்.

இவரைத் தொடர்ந்து பௌச்சருடன், கெம்ப் ஜோடி சேர்ந்தார். அணியின் ஸ்கோர் 190 ஐ எட்டியநிலையில் 6 ஓட்டங்களைப் பெற்றிருந்த கெம்ப் - பண்டாரவின் பந்தில் சங்ககாரவினால் ஸ்டம்ப் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

அடுத்து பௌச்சருடன் பிறின்ஸ் இணைந்தார். இருவரும் நிதானமாக ஆடி அணியை வெற்றிப்பாதைக்கு இட்டுச் சென்றனர். இதன்படி தென்னாபிரிக்க அணி 45.1 ஓவர்களில் 224 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்டுக்களால்



இலங்கை அணியைத் தோற்கடித்தது. பௌச்சர் 34 ஓட்டங்களுடனும், பிறின்ஸ் 20 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் முரளிதரன் 3, பண்டார 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

# கராச்சி டெஸ்ட் போட்டி; பாகிஸ்தான் ஆதிக்கம்



கராசசி


கராச்சியில் நடைபெற்றுவரும் இந்திய அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் 3ஆம் நாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 5 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 511 ஓட்டங்களைக் குவித்து வலுவான நிலையை எட்டியுள்ளது.

முதல் இனிங்ஸில் 245 ஓட்டங்களைப் பெற்ற பாகிஸ்தானுக்கு எதிராக இந்திய அணி 238 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதையடுத்து இரண்டாவது இனிங்ஸில் ஆடத்தொடங்கிய பாகிஸ்தான் அணி இரண்டாம் நாள் ஆட்டநேரமுடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்தநிலையில் நேற்று தொடர்ந்து ஆடிய யுனுஸ்கானும் மொகமட் யூசுப்பும் ஸ்கோரை 280 வரை கொண்டு சென்றனர். அனில் கும்ளேயின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் 3ஆவது விக்கெட்டாக வீழ்த்தப்பட்ட யுனுஸ்கான் 122 பந்துகளில் 11 பவுண்டரிகளுடன் 77 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து பைசல் இக்பால் களமிறங்கி அபாரமாக ஆடி சதமடித்தார். ஸ்கோர் 318ஐ எட்டியபோது - அனில் கும்ளேயின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் மொகமட் யூசுப் ஆட்டமிழந்தார். சதமடிக்கும் வாய்ப்பை நழுவவிட்ட இவர், 161 பந்துகளில் 12 பவுண்டரிகளுடன் 97 ஓட்டங்களை எடுத்திருந்தார்.





அடுத்து களமிறங்கிய அப்ரிடியும் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார். இதனால் வேகமாக உயர்ந்த ஸ்கோர் 402ஐ எட்டியது. 46 பந்துகளில் 9 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 60 ஓட்டங்களை எடுத்திருந்த அப்ரிடி, ஆர்.பி.சிங்கின் பந்தில் டெண்டுல்கரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து அப்துல் ரசாக் களமிறங்கினார். நேற்றைய ஆட்டநேரமுடிவில் பாகிஸ்தான் அணி - 127 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 511 ஓட்டங்களை குவித்திருந்தது. இதில் பைசல் இக்பால் 191 பந்துகளில் 12 பவுண்டரிகள் அடங்கலாக 103 ஓட்டங்களுடனும், அப்துல் ரசாக் 92 பந்துகளில் 2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 44 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

# கராச்சி டெஸ்டில் கங்கூலி; பயிற்சியாளர் சப்பல் எதிர்ப்பு



கராச்சி

கராச்சி டெஸ்டில் சௌரவ் கங்கூலியைச் சேர்த்ததற்கு பயிற்சியாளர் கிரேக் சப்பல் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். ஏற்கனவே ஒருநாள் போட்டிகளில் புறக்கணிக்கப்பட்டுவரும் கங்கூலி, இனி டெஸ்டிலும் வாய்ப்புப் பெறுவாரா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

பாகிஸ்தான் சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி - மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. முதல் டெஸ்டில் இடம்பெற்ற முன்னாள் கப்டன் சௌரவ் கங்கூலி, பைசலாபாத்தில் நடந்த இரண்டாவது போட்டியில் நீக்கப்பட்டார்.

இதற்குக் காரணம், ஐந்து பந்துவீச்சாளர்கள் களமிறங்கவேண்டும் என்பதற்காக கங்கூலியை நீக்கியதாக இந்திய கிரிக்கெட் சபை கூறியது. இதையடுத்து, கராச்சி போட்டியில் ஆடுகளம் பந்துவீச்சுக்கு சாதகமாக அமைக்கப்பட்டபோதிலும், சுழற்பந்து வீச்சாளரான ஹர்பஜன் சிங்கை நீக்கிவிட்டு கங்கூலிக்கு வாய்ப்பு வழங்கினார்கள்.

இதற்கு இந்திய அணியின் பயிற்சியாளர் கிரேக் சப்பல் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததாகக் கூறப்பட்டுள்ளது. போட்டிக்கு முன்னதாக, 11 பேர் கொண்ட அணியைத் தேர்வு செய்யும்போது, கங்கூலியைச் சேர்க்கக்கூடாது என மிகவும் போராடியதாக, பாகிஸ்தானின் தி நியூஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டது. இதில் கூறப்பட்டுள்ளதாவது -

பைசலாபாத்தில் களமிறங்கியதைப் போலவே, கராச்சியிலும் ஐந்து பந்து வீச்சாளர்களுடன் விளையாடவேண்டுமென சப்பல் வாதிட்டுள்ளார். அடுத்ததாக இந்தியாவில் நடைபெறவுள்ள இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில், விக்கெட் காப்பாளர் டோனி உட்பட ஆறு துடுப்பாட்ட வீரர்கள் மற்றும் ஐந்து பந்துவீச்சாளர்களுடன் களமிறங்க திட்டமிட்டுள்ளதாக சப்பல் கூறியுள்ளார். இந்தச் சோதனையை கராச்சி டெஸ்டிலும் செயற்படுத்தவேண்டுமென தேர்வின் போது தெரிவித்தார்.

ஆனால்- கப்டன் ராவிட், முகாமையாளர் ராஜ்சிங் துங்கர்பூர், தேர்வுக்குழு உறுப்பினர் ரன்ஜிப் பிஸ்வால் ஆகியோர் சப்பலின் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. முக்கியமான டெஸ்ட் என்பதால், அனுபவமிக்க கங்கூலியைச் சேர்க்கவேண்டுமென அவர்கள் கூறியுள்ளனர்.

தவிர, ஐந்து பந்துவீச்சாளர்களுடன் களமிறங்குவது இந்திய அணியின் வழக்கமல்ல. இதனால் எப்போதும்போல் அதிகமான துடுப்பாட்ட வீரர்களுடன் விளையாடலாமென அணி நிர்வாகம் முடிவு செய்தது. இந்தக் காரணத்தால் தான் கராச்சி போட்டியில் கங்கூலி சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு தி நியூஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. ஐந்து பந்துவீச்சாளர்கள் என்ற சப்பலின் புதிய யோசனை, கங்கூலியின் டெஸ்ட் போட்டி வாய்ப்பையும் கெடுப்பதாக இருக்கிறது. ஒருவேளை இனிவரும் போட்டிகளில் ஐந்து பந்துவீச்சாளர்கள் சேர்க்கப்பட்டால், கங்கூலியின் கதி பரிதாபம்தான்.




# தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை

## எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

✷ பாடசாலை விளையாட்டுப் போட்டி ஒன்றில் இடம்பெறும் நிகழ்ச்சிகளைத் தெரிந்து 1 முதல் 5 வரையுள்ள சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

| | |
|---|---|
| பரத நாட்டியம் | தேசியக் கொடியேற்றல் |
| அணிவகுப்பு | கயிறு இழுத்தல் |
| விநோத உடைப்போட்டி | பத்திரிகை வாசித்தல் |
| கரம்போட் விளையாட்டு | உயரம் பாய்தல் |

01. ..................................................
02. ..................................................
03 ..................................................
04. ..................................................
05. ..................................................

✷ பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ் கோடிடுக.

06. நீரினுள் வாழும் பிராணி ஒன்று தருக.
1. வெளவால் 2. தவளை 3. ஆமை 4. திமிங்கலம்

07. எமது நாட்டின் உணவுப் பொருள்
1. எள் 2. நெல் 3. சோளம் 4. குரக்கன்

08. காய வைப்பதன் மூலம் பேணப்படும் உணவுகளில் ஒன்று.
1. பனங்கிழங்கு 2. தேசிக்காய் 3. பலாக்காய் 4. விளிம்பிக்காய்

09. ஒரு வைத்தியசாலையில் மிக முக்கியமாகப் பேணப்பட வேண்டியது.
1. ஒழுக்கம் 2. கண்ணியம் 3. கடமை 4. சுத்தம்

10. இவற்றுள் விளிம்பு, உச்சி என்பன இல்லாதது
1. கூம்பு 2. உருளை 3. சதுரமுகி 4. கோளம்

11. பின்வரும் எண்களில் சதுர எண் யாது எனத் தெரிந்து அதன் கீழ் கீறிடுக.
1. 80 2. 90 3. 100 4. 110

12. இலங்கையில் ஆகக்கூடிய மழைவீழ்ச்சி கிடைக்கும் மாவட்டம்.
1. நுவரெலியா 2. கொழும்பு 3. அம்பாறை 4. காலி

13. மிகப்பெரிய கிரகம் எது.
1. சனி 2. புதன் 3. வியாழன் 4. சந்திரன்

14. கூடிய சத்தத்துடன் செல்லும் விமானம் எது.
1. ஜெட் 2. ஹெலிகொப்டர் 3. கப்பல் 4. போர்விமானம்

15. சந்தை ஒன்றில் எப்போதும் காணக்கூடியது.
1. மீன்கள் 2. மரக்கறிகள் 3. மனிதர்கள் 4.கட்டடங்கள்

✷ பின்வரும் நிகழ்வுடன் மிகவும் பொருத்தமான தொடர்பைக் கொண்டுள்ள பழமொழியைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.

16. அந்த நாயின் கொடூரத்தை அறியாத சிறுவன் அதனால் தாக்கப்பட்டான்.
1. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் 2. புத்திமான் பலவான்
3. ஆழமறியாது காலைவிடாதே


17. எந்தவொரு காரியமும் குறித்தவொரு காரணத்துடனேயே நடைபெறும்
1. புலிக்குப் பிறந்தது பூனையாகுமா 2. சோழியன் குடுமி சும்மா ஆடாது
3. துள்ளுகிறமாடு பொதிசுமக்கும்

18. ஒருவரது நடத்தைகளைக் கொண்டு அவர் நல்லவரா கெட்டவரா என்பதை அறியலாம்.
1. கெடுவான் கேடு நினைப்பான் 2. நிழலின் அருமை வெயிலிற் தெரியும்
3. அகத்தினழகு முகத்திற் தெரியும்

19. எனக்கு உதவி செய்தவரை வாழ் நாளில் ஒருபோதும் மறக்க மாட்டேன்
1. பழகப் பழக பாலும் புளிக்கும்
2. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
3. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே

20. அளவுக்கு மிஞ்சிய ஆசையால் நாதன் துன்பத்தை அனுபவித்தான்.
1. சிறுதுளி பெருவெள்ளம் 2. வைக்கோற் பட்டறை நாய்
3. பேராசை பெருநட்டம்

✷ கொடுக்கப்பட்டுள்ள படத்தை அவதானித்து சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ் கீறிடுக.




21. இத் திண்மத்தின் பெயர் என்ன?
1. சதுரம் 2. கனவுரு 3. சதுரமுகி 4. நான்முகி

22. இத்திண்மத்துக்கு உள்ள முகங்களின் எண்ணிக்கை யாது?
1. 5 2. 6 3. 4 4. 2


23. இத்திண்மத்துக்கு உள்ள உச்சிகளின் எண்ணிக்கை.
1. 8 2. 12 3. 1 4. 4

24. இத்திண்மத்துக்கு உதாரணம்
1. தாயக்கட்டை 2. தீப்பெட்டி 3. தகரப்பேணி 4.உருளை


25. இத்திண்மத்தின் ஒரு முகத்தின் சுற்றளவு யாது?
1. 10 m 2. 12m 3. 6m 4. 8m

✷ வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன்கீழ் கோடிடுக.

26. 1) 26 2) 30 3) 32




27. 1) 13 2) 14 3) 11




✷ பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் பெட்டியினுள் தரப்பட்டுள்ள சொற்கள் மூன்றும் எந்தச் சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமானது என்பதைத் தெரிந்து அதன்கீழ் கோடிடுக.

28. [சந்திரன்] [நட்சத்திரம்] [வெளவால்]
1. இரவு 2. பகல் 3. மேகம் 4. சூரியன்

29. [கலப்பை] [வயல்] [நெல்]
1. கழனி 2. விவசாயி 3. ஏர் 4. மனிதன்

30. [நீர்] [ஆவி] [மேகம்]
1. வானம் 2. மனிதன் 3. விமானம் 4. மழை

31. பின்வரும் படத்தின் கோலத்துக்கு அமைய வெற்றிடத்துக்குப் பொருத்தமான படத்தைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| X | | X | | X | |
| | X | | X | | X |
| X | | | | X | |
| X | | | | X | |
| | X | | X | | X |

1.

| | |
|---|---|
| | X |
| X | |

2.

| | |
|---|---|
| X | |
| X | |


3.

| | |
|---|---|
| | X |
| | X |

4.


| | |
|---|---|
| X | |
| | X |

32. கீழே ஒரு சொல் இரகசியக் குறியீட்டுப் படத்தின் முகம் காட்டப்பட்டுள்ளது.




மேலே உள்ள குறியீடு குறிக்கும் சொல் எது?
1. கதிரகம 2. மதுரகவி 3. திகமதுர

33. 2006 பின்வரும் குறியீட்டினால் தரப்பட்டுள்ளது.



எனின் 2004 ஐக் குறிக்கும் குறியீடானது

1. 

2. 

3. 

✷ கீழே தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமானதை மட்டும் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக.

(கந்தளாய், யாழ்ப்பாணம், ஹிக்கடுவை, வாழைச்சேனை, புத்தளம், சிகிரியா, பரந்தன், பம்பரகந்த)

34. இலங்கையில் உப்பளம் உள்ள பிரதேசம்
..................................................

35. உல்லாசப் பிரயாணிகள் விரும்பும் பிரதேசம்
..................................................

36. உலகப்பிரசித்தி பெற்ற சுவரோவியங்கள் உள்ள இடம்.
..................................................

37. கரும்புத் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்.
..................................................

38. இரசாயனத் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்.
..................................................

39. கடதாசித் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்.
..................................................

40. இலங்கையின் உயரமான நீர்வீழ்ச்சி
..................................................

# தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை

## பகுதி - II

✳ கீழ்வரும் பாடல்களைப்படித்து இல 1 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

| 1. | 2. |
|---|---|
| சின்னச் சின்னத் தேனீ | அன்னை தன்னைப் பேணி |
| சிறுமை இலாத் தேனீ | அன்பு மிக்க தேனீ |
| உன்னைப் போல நானும் | வண்ண வண்ணப் பூவை |
| உலகை வலம்வர வேணும் | வளைந்து வரும் தேனீ |

1. முதலாவது பாடலில் உள்ள அடுக்கு மொழி யாது?........................................
2. பாடலில் குறிப்பிடப்படும் பெயர்ச்சொல் ஒன்றினை எழுதுக?........................................
3. பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள வினைச் சொல் ஒன்றினை எழுதுக?........................................
4. சிறுமை என்பதற்கு எதிர்க்கருத்துள்ள சொல் தருக?........................................
5. வளைந்து வரும் தேனீ என்ற வாக்கியத்தின் எழுவாய் யாது?........................................
6. விவசாயிக்கு நன்மை விளைவிக்கும் பூச்சி எது?........................................
7. வரவேணும் என்பதை எழுத்து வடிவத்தில் எழுதுக?........................................
8. பூவை என்பதைப் பன்மையில் எழுதுக?........................................
9. அன்னை என்பதற்கு ஒத்தகருத்துள்ள சொல் தருக?........................................
10. வரும் என்பதை இறந்தகால வடிவத்தில் எழுதுக?........................................

✳ கீழ்வரும் ஒவ்வொரு படத்திலும் காட்டப்படுபவைகளுக்குரிய ஆங்கிலப் பெயரை( ஆங்கில எழுத்துக்களை உபயோகித்து) படத்தின் கீழுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

11. 
..............................

12. 
..............................

13. 
..............................

14. 
..............................

✳ பின்வரும் சொற்களுக்குச் சமமான சிங்களச் சொல்லைத் தருக.


15. நன்றி..............................
16. ஐந்து..............................
17. அக்கா ..............................
18. அலுமாரி..............................
19. கடலை..............................

✳ கீழ்வரும் ஒவ்வொரு கூற்றும் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.

20. செம்பு தலையில் கொண்டோடுதல் சமநிலை ஆளுமைக்குரிய விளையாட்டு ஆகும். (..........)
21. இலங்கையின் தேசியப் பூ நீரோற்பவம் ஆகும். (..........)
22. பன்னடி குற்றிகள் மூலம் எண்களை மாணவர் இனம் காணலாம். (..........)
23. மாகாணசபை நிர்வாகத்திற்குப் பொறுப்பானவர் அரசாங்க அதிபர். (..........)
24. சிவப்பு, மஞ்சள், நீலம் என்பன மூலவர்ணங்களாகும். (..........)
25. அச்சுப்பதித்தல் மூலம் அலங்கார கோலங்களை ஆக்குவதற்கு வெண்டிக்காய் பயன்படுகிறது. (..........)
26. நகை வேலை செய்யுமிடம் கம்மாலை எனப்படும். (..........)
27. நிறக்கடதாசிகளை உருண்டையாக்கி கோட்டுச் சித்திரத்தில் ஒட்டுதல் கொலாஜ் எனப்படும். (..........)
28. தென்னந் தும்பினால் கயிறு திரித்தல், பின்னுதல், இழைத்தல் தொடர்பான அடிப்படைத் திறன்களை விருத்தி செய்வதாகும். (..........)
29. தையல் வகைகளில் சோம் தையலும் ஒன்றாகும். (..........)

✳ கீழே காட்டப்பட்டுள்ள ஆக்கங்களின் பெயர்களைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

30. 
..............................

31. 
..............................

32. 
..............................

33. 
..............................

✳ நாம் வாழும் சூழலில் நடைபெறுகின்ற பரிபாலன அலகு சில கீழேயுள்ள அட்டவணையில் முதலாவது கூட்டில் காட்டப்பட்டுள்ளன. பரிபாலன அலகுகளை நிர்வகிக்கும் அதிகாரிகளை மூன்றாவது கூட்டில் தொடர் ஒழுங்கில்லாமல் காட்டப்பட்டுள்ளன. முதலாவது கூட்டில் குறிப்பிடப்படும் பரிபாலன அலகுகளுக்குப் பொருத்தமான விடையை மூன்றாவது கூட்டிலிருந்து தெரிந்து அதற்குரிய இலக்கத்தை இரண்டாவது கூட்டில் புள்ளிக் கோட்டில் எழுதுக.

| | பரிபாலன அலகு | சரியானவிடைஇல | பொறுப்பான அதிகாரி |
|---|---|---|---|
| 34. | பரீட்சைத் திணைக்களம் | | 1.ஆளுநர் |
| 35. | மாவட்டம் | | 2.அரசாங்க அதிபர் |
| 36. | மாகாணம் | | 3. ஜனாதிபதி |
| 37. | நாடு | | 4.முகாமையாளர் |
| 38. | பல்கலைக்கழகம் | | 5. பரீட்சை ஆணையாளர் |
| 39. | பிரதேச செயலகம் | | 6. தபால்மா அதிபர் |
| 40. | அஞ்சல் திணைக்களம் | | 7. பிரதேச செயலாளர் |
| 41. | வங்கிகள் | | 8. உபவேந்தர் |

✳ பின்வரும் பந்தியை வாசித்து இல 42 முதல் 46 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.


ஆரம்ப விஞ்ஞான பாடத்திற்குப் பொருத்தமான எளிய பரிசோதனை ஒன்றை நடத்துவதற்குச் சகல மாணவர்களும் ஒரு மின்குமிழ் இரண்டு மின்கலங்கள், வயர் 50cm வீதம் கொண்டு வரும்படி ஆசிரியை பணித்தார். சகல மாணவர்களும் திரு.சிவகுமார் அவர்களின் கடையிலிருந்து இந்தச் சாமான்களைக் கொள்வனவு செய்தனர். திரு.சிவகுமார் மின்கலம் ஒன்றை ரூபா. 20.00 வீதமும் மின்குமிழ் ஒன்றை ரூபா.8.00 வீதமும், வயர் ஒரு மீற்றரை ரூ. 6.00 வீதமும் விற்றார். வகுப்பிலுள்ள மாணவர்களின் 40 பேரில் 8 பேர் அன்றைய தினம் வரவில்லை.

42. வகுப்பிற்குக் கொண்டு வரப்பட்ட மின்கலங்கள் எத்தனை?........................
43. வகுப்புக்கு கொண்டு வந்த வயரின் மொத்த நீளம் யாது?........................
44. ஒரு பிள்ளை ஒரு மின்குமிழ், இரண்டு மின்கலம் 50cm வயர் வாங்கிக் கொண்டு கடைக்காரனிடம் ரூபா 50.00 கொடுத்தால், கடைக்காரன் இன்னும் எவ்வளவு பணம் கேட்பான்?........................
45. மின்குமிழ் . பணித்தார். ஆசிரியை. அதிபர் என்னும் சொற்களுள் வினைச் சொல்லை எழுதுக?........................
46. ஆண் யானை களிறு என்பது போல ஆண்மான் .................. என்று அழைக்கப்படும்.


✳ பின்வரும் சொற்களை பன்மையில் எழுதுக.

47. மின்குமிழ்..............................
48. மின்கலத்தை..............................
49. பிள்ளையிடம்..............................
50. வயரில்..............................

✳ பல பிரிவுகளைக் கொண்ட கல்லூரியொன்றில் A,B,C,D,E என்னும் ஐந்து வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை காட்டுவதற்கான வரை படமொன்று கீழே தரப்பட்டுள்ளது. இத்தகவல்களைப் பயன்படுத்தி கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.




51. D வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை 40 எனில், A வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?................
52. சமமான தொகையான மாணவர்கள் உள்ள வகுப்புக்கள் எவை?................
53. B வகுப்பிலுள்ள மாணவர் தொகை யாது?........................
54. E வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை மொத்த மாணவர்களின் எண்ணிக்கையின் என்ன பங்கு?........................
55. பாடசாலையிலுள்ள முழு மாணவர் தொகை யாது?........................
56. C வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?........................
57. D யை விட Aயில் எத்தனை மடங்கு கூடுதலான மாணவர்கள் உள்ளனர்?........................
58. மருந்து மூலிகைச் செடிகள் இரண்டின் பெயரினை எழுதுக?........................
59. ஒட்டுண்ணித் தாவரம் ஒன்றினை எழுதுக?........................



60. இப்பரிசோதனை எதனைக் காட்டுகிறது?........................
61. நடுவிலுள்ள அட்டையை சிறிது வலது புறமோ அல்லது இடது புறமோ நகர்த்துவோமாயின் யாது நிகழும்?........................

✳ நான் எனது நண்பனுக்கு கொடுக்கவுள்ள பரிசுப் பொருள் எனும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய், பயனிலைகள் அமைந்த வாக்கியங்கள் ஆறு எழுதுக. ஒரு வாக்கியத்தில் குறைந்தது நான்கு சொற்களேனும் இருக்க வேண்டும்.

1. ..............................
2. ..............................
3. ..............................
4. ..............................
5. ..............................
6. ..............................

**விடைகள் - அடுத்தவாரம்.**

## சென்றவார விடைகள்...

**ஆசிரியர் - த.அம்பிகைபாகன்**

### வினாத்தாள் - 01

(01) 3 (02) 4 (03) 4 (04) 3 (05) 2 (06) 2 (07) 2
(08) 2 (09) 1 (10) 2 (11) 4 (12) 3 (13) 1 (14) 5
(15) 2 (16) பாம்புப்புற்று (17) தேன்கூடு (18) சிலந்திவலை
(19) தூக்கணாங்குருவி கூடு (20) மரப்பொந்து (21) 2
(22) 3 (23) 3 (24) 2 (25) 3 (26) 2 (27) 2 (28) 2
(29) 1 (30) 2 (31) 3 (32) ▦ (33) 3 (34) 2 (35) 1
(36) 3 (37) 3 (38) 4 (39) 1 (40) 3

### வினாத்தாள் - 02

(01) விஸ்வாமித்திரர், இராமன், இலக்குமணன்
(02) ஜனகன் செய்யும் வேள்வியைக் காண (03) கௌதம முனிவர்
(04) விஸ்வாமித்திரர் (05) இராமன்கால்பட்டதும்
(06) ஜனகன் (07) புகழ்ந்தனர்/மெச்சினர்
(08) புறப்பட்டார்/கிடந்தது/மாறியது/பாராட்டினார்/சென்றனர்
(09) யாகம் செய்தல் (10) இராமன் (11) ரூபா 40.00 (12) 245.00
(13) ரூபா 85.00 (14) ரூபா 6.00 (15) ரூபா 37.00 (16) ஆறு
(17) XV (18) ரூபா 300 19) ரூபா 37.00 (20) தை, பங்குனி. வைகாசி /ஜனவரி, மார்ச், மே
(21) மாதுளம்பழம் (22) முந்திரிகை (23) றம்புட்டான் (24) அப்பிள்பழம்
(25) வணக்கம் (26) உட்காருங்கள்/அமருங்கள் (27) எட்டு
(28) அண்ணா (29) தபாற்பெட்டி (30) எழுதுவேன் (31) சேவல்
(32) நாங்கள் (33) திரண்டால்மிடுக்கு (34) ஓவியம் (35) மழை
(36) இருந்தது (37) தேயிலை+செடி
(38) கழுதை மீது அமர்ந்தவாறே சவாரி செய்தனர் (39) கம்பளித்தையல்
(40) முள்ளுத்தையல் (41) சிறுநூலோடி (42) கோழிக்கால்
(43) மரமஞ்சள் (44) சதைகரைச்சான் (45) ஆடாதோடை
(46) கறிவேப்பிலை (47) பாண் (48) முகம்
(49) துவிச்சக்கரவண்டி (50) மாம்பழம் (51) பூனை
(52) பிழை (53) சரி (54) சரி (55) சரி
(56) சரி (57) சரி (58) சரி

# பிள்ளைகளின் கற்றல் விருத்திக்கு பெற்றோரின் ஒத்துழைப்பு அவசியம்

## கிராம அலுவலர் க.திருநாவுக்கரசு

உடுவில்

கொடி படர்வதற்கு மரம் எவ்வளவு அவசியமோ அதே போல பிள்ளைகளின் கல்வி உயர்வுக்கு பெற்றோர்களின் ஒத்துழைப்பு மிக மிக அவசியமென கந்தரோடைக் கிராம அலுவலர் க.திருநாவுக்கரசு தெரிவித்தார்.

கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையில் நடைபெற்ற தரம் 1 இற்கான கால்கோள் விழா வில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலை ஆசிரியர் திருமதி ந.ட.தயாளஜெயன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில் -

பெற்றோர் குறைந்தது கிழமையில் ஒருநாளாவது பிள்ளைகளின் அப்பியாசக் கொப்பிகளை பார்வையிட வேண்டும்.

மாதத்தில் ஒரு தடவையேனும் பாடசாலைக்குப் போய் பிள்ளையின் கல்வி நிலை தொடர்பாக அறிய வேண்டும். தங்களுக்கு தெரிந்த ஒரு சில பாடங்களையேனும் அவர்களுக்கு கற்பித்து அவர்களின் சந்தேகங்களைத் தீர்க்க வேண்டும். இவ்வாறு செய்து வந்தால், பிள்ளைகள் கல்வியில் நன்கு முன்னேறுவர். இது நான் எனது அனுபவத்தில் கண்ட உண்மை.

இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்பிருந்த கல்வி நிலை வேறு, இன்றுள்ள கல்வி நிலை வேறு. அந்தக் காலத்தில் 5ஆம் தரம்வரை கற்பவர்களே மிகக் குறைவு. 8ஆம் தரம் சித்தி பெற்றவர்கள் அரசாங்கத்தில் சிற்றூழியராக சேர்த்துக் கொள்ளப்படுவார்.

ஆனால், தற்போது பட்டதாரிகளுக்குக் கூட உரிய வேலை பெற போராட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. காரணம் கல்வி கற்பவர் எண்ணிக்கை தற்காலத்தில் அதிகம். இதற்காக அரசாங்கம் பல திட்டங்கள் மூலம் கல்வியில் புதிய செயற்பாடுகளைப் புகுத்தியுள்ளது. இவை மாணவர்களுக்கு மிகுந்த சுமையாக உள்ளது. இந்த சுமையில் பெற்றோரும் சிறிது ஏற்றால் தான் மாணவர்கள் கல்வி என்ற கடலை கடக்க முடியும் எனக் கூறினார்.

பாடசாலை அதிபர் க.செல்வக்குமார் உரையாற்றும்போது -

பெற்றோர்கள் பிள்ளைகளை அனுமதிக்கும்போது மட்டும் பாடசாலைக்கு வந்துவிட்டு பின் பாடசாலைப் பக்கமே எட்டிப்பார்க்காது பிள்ளை படிக்கவில்லை ஆசிரியர்கள் கற்பிக்கவில்லை என குறை கூறுவார்கள்.

மாதத்தில் ஒரு தடவையேனும் ஒவ்வொரு பெற்றோரும் பாடசாலைக்கு வந்து தங்கள் பிள்ளைகள் பற்றி அறிந்து கொண்டால், பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி இலகுவாக அதிகரிக்கும் என்றார்.

வலிகாமம் வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். விஜேந்திரசர்மா உரையாற்றும் போது-

நகர்ப்புறப் பாடசாலைகளை மாணவர் நாடிச் செல்வதால் அவர்களின் பிரயாண நேரம் அதிகரிக்கிறது. உடல் சோர்வடைகிறது. இவற்றால் கல்வியில் எதிர்பார்த்த பலனை எல்லோராலும் பெறமுடியாது போகிறது.

எல்லாப் பாடசாலைகளிலும் ஒரே பாடத்திட்டம் போதிக்கப்படுகின்ற போதும் கிராமப்புறப் பாடசாலைகளை ஏன் பெற்றோர்கள் மதிக்கிறார்கள் இல்லை என்பது புரியவில்லை என கூறினார்.

இந்த நிகழ்வில் வறுமைக் கோட்டுக்குட்பட்ட சுமார் 50 மாணவர்களுக்கு முன்னாள் யாழ்ப்பாண நகர மேயர் எஸ்.எஸ். நவரட்ணம் நினைவாக கற்றல் உபகரணங்களும், வங்கி சேமிப்பு புத்தகங்களும் வழங்கப்பட்டன. (101)

# பஸ்களில் படையினர்; பொதுமக்கள் அச்சம்!

பருத்தித்துறை

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் போக்குவரத்தில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச்சபை பஸ்கள் மற்றும் தனியார் பஸ்களில் படையினர் ஏறிப் பயணிப்பதால் பொதுமக்கள் பெரும் அச்சத்துடனேயே பயணத்தைத் தொடர்கின்றனர்.

பருத்தித்துறை- யாழ்ப்பாணம் இடையே போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களை தாம் நினைத்த இடங்களில் மறித்து ஏறியும், இறங்கியும் வருவதோடு ஆயுதங்கள் மற்றும் உடைமைகளோடு பொது மக்களை அச்சுறுத்தும் வகையில் பயணிப்பதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன் படையினர் ஏறி இறங்குவதால் நேரம் செல்வதால் பஸ்கள் தாமதமாகவே வருவதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர். (14)



வடமராட்சி லயன்ஸ் கழகம் நடத்திய வெள்ளைப் பிரம்புதின விழாவில் கலந்து கொண்ட கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் உரையாற்றுவதையும், வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் வி.சிவகுமார், கரவெட்டி தபாலதிபர் எஸ்.பரநிருபசிங்கம், லயன் எஸ்.தர்மலிங்கம், லயன் எஸ். கதிரமலை ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (14)

# சின்னஞ்சிறு செய்திகள்

## கூட்டமைப்பு எம்.பிக்கள் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

யாழ்பாணம்

தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கிளிநொச்சிக்கு சென்று தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனை சந்தித்து பேசவுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் சமாதான முயற்சிகள், வடகிழக்கிற்கான உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் வெற்றிடத்துக்குப் பதிலாக யாரை நியமிப்பது என்பன தொடர்பாகவும் பல்வேறு விடயங்கள் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வேலணை - புங்குடுதீவு இடையான பாலவீதி திருத்தம்

யாழ்பாணம்

வேலணை புங்குடுதீவு பகுதியை இணைக்கும் பாலவீதி கடந்த வாரம் முதல் திருத்தம் செய்யப்பட்டுவருகிறது. கடந்த பல காலமாகத் திருத்தம் செய்யப்படாமல் குன்றும் குழியுமாக இருந்து அப்பகுதியூடான வாகனப் போக்குவரத்துக்குப் பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தியமை தெரிந்ததே.

இதேவேளை, இந்த வீதியின் மோசமான நிலைமை காரணமாகப் பல வீதி விபத்துக்களும் இப்பாதையில் ஏற்பட்டுள்ள நிலையில் தற்போது இந்த வீதி மீளச் செப்பனிடப்படுவதால் தொடர்ந்து மக்கள் சீரான போக்குவரத்தை மேற்கொள்ள முடியுமென்பது இங்கு குறிப்பிடதக்கது. (113)

## அரங்கியல்சார் மாதாந்த பயிற்சிப்பட்டறை

சுதுமலை

உரும்பிராய் திருமறைக் கலாமன்றத்தின் மாதாந்த அரங்கியல்சார் பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை உரும்பிராய் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

நடிப்பு, குரல் பயிற்சி தொடர்பான முழுநாள் பயிற்சிப் பட்டறையில் மன்ற இளைஞர், யுவதிகள் கலந்து கொள்ளவுள்ளதாகச் செயலாளர் டொ. பற்றீசியா தெரிவித்தார்.

மன்ற இணைப்பாளர் இ.விஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் இ.ஜெயகாந்தன், ஜொணிஆகியோர் உளவியலாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (91)

## திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு திருக்குறள் மனனப் போட்டி

உடுவில்

திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு மானிப்பாய் மருதடி அறநெறிப் பாடசாலையினரால் மாணவர்கள் மத்தியில் திருக்குறள் மனனப் போட்டி நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் மெமோறியல் பாடசாலையில் நடைபெறும் போட்டியில் தரம் 3 தொடக்கம் தரம் 11 வரையான சகல மாணவர்களும் பங்குபற்றலாம்.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு சிவராத்திரி தினத்தன்று பரிசில்கள் வழங்கப் படும்.

இது தொடர்பாக மேலும் தகவல்கள் பெற விரும்புவோர் அறநெறிப் பாடசாலை அதிபர் சமூகஜோதி கா. கணேசதாசனுடன் தொடர்பு கொள்ளவும். (101)

## மகா கும்பாபிஷேகம்

உடுவில்

அராலி தெற்கு உதரான்பதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதற்கான ஆரம்பக் கிரியைகள் இன்று காலை 6 மணிக்கு விநாயக வழிபாட்டுடன் ஆரம்பமாகும்.

நாளை காலை 9 மணியிலிருந்து பக்தர்கள் எண்ணைக் காப்புச் சாத்துதல் இடம்பெறும்.

சனிக்கிழமை முதல் மண்டலாபிஷேகம் ஆரம்பமாகி 17ஆந் திகதி வெள்ளிக்கிழமை மண்டல அபிஷேகப் பூர்த்தி சங்காபிஷேகம் இடம் பெறும். (101)

## நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்

மகிந்தவின் சிந்தனைக்கமைய கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு இரண்டு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு மில்லியன் ரூபா நிதி பிரதேசத்தில் குடிநீர் பிரச்சினை உள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான பவுசர் வண்டி கொள்வனவுக்கும், மிகுதி ஒரு மில்லியன் ரூபா பிரதேச மக்களின் நலத்திட்டங்கள் குறித்து விரைவில் ஏதாவது ஒரு திட்டத்துக்கு ஒதுக்கப் படவுள்ளதாக கோப்பாய் பிரதேச செயலர் தெரிவித்தார். (90)

# சுனாமி பாதித்த வெற்றிலைக்கேணி மக்களுக்கு மார்ச் முதல் வாரத்தில் 70 வீடுகள் கையளிப்பு!

சுதுமலை

கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தால் - சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வெற்றிலைக்கேணிப் பிரதேச மக்களுக்கு நிரந்தர வீடுகள் கையளிக்கப்படவுள்ளன.

வெற்றிலைக்கேணிப் பிரதேசத்தில் மார்ச் மாதம் முதல் வாரத்தில் 70 நிரந்தர வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ளதாக நிறுவனத்தின் இயக்குநர் அருட்திரு கி.யோ. ஜெயக்குமார் அடிகளார் தெரிவித்தார்.

மேற்படி பிரதேசத்தில் 20 வீடுகளின் வேலைகள் பூர்த்தியான நிலையிலுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, மருதங்கேணியில் கலாசார மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த வாரம் நிறுவன இயக்குநர் தலைமையில் இடம்பெற்றது.

துரித கதியில் கலாசார மண்டப நிர்மாணிப்புப் பணிகள் இடம்பெற்று மக்களின் பாவனைக்கு மிக விரைவில் கையளிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (91)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஐந்து





பெயர் : பி.நிலானி
முகவரி : வரணி.

அகவை ஒன்பது





பெயர் : ம.மணிவண்ணன்
முகவரி : பருத்தித்துறை.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :





கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்


# கடற்படையினரின் இரவு ரோந்தால் தொலைத்தொடர்பு சேவை முடக்கம்

நெடுந்தீவு

நெடுந்தீவுப் பிரதேசத்திலுள்ள ப.நோ.கூ.சங்க தொலைத்தொடர்பு நிலைய சேவை கடந்த வாரம் முதல் தினமும் இரவு 8.30 மணியுடன், கடற் படையினரது இரவு ரோந்துகள் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளதாக பொது மக்கள் விசனம் தெரிவித்தனர்.

கடந்த பல வருடங்களாக 24 மணி நேர சேவையாற்றி வந்த இந்தத் தொலைத்தொடர்பகம் தற்போது குறித்த நேரத்துடன் முடிவுறுத்தப்படுவதால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை மக்களது இரவு நேர போக்குவரத்துகள், நடமாட்டங்கள் தொடர்பாக கடற்படையினரால் நடைமுறைப்படுத்தப்பட்ட நேர நடைமுறையினாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகப் பொது மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (113)

# கதிரமலைச் சிவன் கோவிலில் மஹா சிவராத்திரி தின விழா

யாழ்ப்பாணம்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்தும் மஹா சிவராத்திரி விழா எதிர்வரும் 28 ஆம் திகதி சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவிலில் இடம் பெறவுள்ளது.

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலக அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் இடம் பெறும் இந்த விழாவில் 28 ஆம் திகதியன்று மாலை 6மணிக்கு ஆரம்பமாகி அடுத்தநாள் காலை 6 மணி வரை இடம்பெறும்.

விழாவுக்கு முதன்மை விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் கலந்து கொள்வார். ஆசியுரையை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சர்வேஸ்வரக் குருக்கள் வழங்குவார்.

இரவு முழுவதும் பண்ணிசை, குழு நடனம், வில்லிசை, நாடகம் உள்ளிட்ட பல கலை, பக்தி நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. இந்த விழாவில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# கிளிநொச்சி மாவட்டத்திலும் புற்றுநோய் சிகிச்சை வசதி

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் - வன்னி மாவட்ட புற்றுநோயாளர்கள் தமது பிரதேசங்களில் புற்றுநோய்க்கு சிகிச்சைபெற- யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சா.கேதீஸ்வரன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

தற்போது மாதத்தில் 2 தடவைகள் புற்றுநோய் சிகிச்சை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, தெல்லிப்பளை புற்றுநோயாளர் சிகிச்சை நிலையம், சாவகச்சேரி மாவட்ட வைத் தியசாலை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஆகியவற்றில் நடத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

வன்னிமாவட்ட புற்றுநோயாளர் நலன்கருதி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இந்தப் புற்றுநோய் சிகிச்சைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை கிளினிக்குகளில் புற்றுநோய் சத்திரசிகிச்சை நிபுணர் ஜெயக்குமார் நடத்தி வருகிறார்.

# பெற்றோரின் வருமானத்திலேதான் பிள்ளைகளின் கல்வி தங்கியுள்ளது

## மன்னார் அரச அதிபர் வே.விஸ்வலிங்கம்

மன்னார்—

பெற்றோரின் வருமானத்தை அதிகரித்தால் பிள்ளைகளின் கல்வியை முன்னெடுத்துச் செல்ல வாய்ப்பு ஏற்படும். அதற்கான நடவடிக்கையை மன்னார் மாவட்ட செயலகம் இப்போது மேற்கொண்டு வருகின்றது என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வே.விஸ்வலிங்கம் தெரிவித்தார்

மன்னார் நகர மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மாபெரும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

2025 ஆம் ஆண்டில் பெரிய தொரு பதவியில் இந்த மாவட்டத்தில் மட்டுமல்ல, நாட்டிலேயே இருப்பவர்கள் தான் - இந்த மாணவச் செல்வங்கள். அதைத்தான் இன்று இந்த விழா மூலம் இனங்காட்டப்படுகின்றது.

எமது உடைமைகள் எம்கண் முன்னே அழிந்து போகலாம். ஆனால், கல்வியானது அப்படியல்ல. அதுவொரு அழியாச் சொத்து என்று நீண்டகாலமாகச் சொல்வார்கள். மன்னார் மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம் என்று சொல்வதைவிட, இது வளர்ந்துவரும் மாவட்டம் என்று கூறுவது இப்பொழுது பொருத்தமாகும்.

கடந்த ஐந்து வருடங்களில் மன்னார் அபிவிருத்திக்கென 400 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த வருடம் பெற்றோரின் வருமானத்தையீட்டும் விதத்தில் சுழற்சி முறைக்கடன் திட்டம் வழங்கி, வருமானத்தை பெருக்க நடவடிக்கை எடுக்கின்றோம். இதனால் மாணவர்களும் தங்கள் கல்வியைத் தொடர வாய்ப்பு ஏற்படும்.

இப்பொழுது நாம் மாவட்ட, மாகாணப்போட்டிகளுக்குத் தயாராகியுள்ளோம். ஆகவே ஆசிரியர் பெற்றோர் இது விடயத்தில் அதாவது கல்வியில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

பெற்றோரின் வருமானத்தை அதிகரித்தால்தான், பிள்ளைகளின் கல்வியை முன்னெடுத்துச் செல்ல வாய்ப்பு ஏற்படும். அதற்கான நடவடிக்கையை மன்னார் மாவட்ட செயலகம் இப்பொழுது மேற்கொண்டு வருகிறது.

அதேவேளையில் இன்று கௌரவிக்கப்படும் இந்தச் சிறார்கள் - 2025 ஆம் ஆண்டில் இந்த மாவட்டத்திலோ அல்லது இந்த நாட்டின் உயர் பதவியிலோ இருக்கப் போகின்றவர்கள். ஆகவே நாம் எல்லோரும் இவர்களை நல்வழிப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

மன்னார் கல்வி வலயத்திலிருந்த 2005 ஆம் ஆண்டு ஐந்தாம்தரப் புலமைப் பரிசில் பரிசு பெற்றவர்களையும் இத்துடன அடைவு மட்டப் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் கல்வியில் ஊக்குவித்து கௌரவிக்கும் நோக்குடன் மன்னார் 'உலகதரிசன்' நிறுவனத்தின் உதவியுடன் மன்னார் கல்விவலயத் திணைக்களம் மாபெரும் விழா ஒன்றை நடத்தியது.

இதில் 51 பாடசாலையிலிருந்து 700 மாணவர்களை பரிசில்கள் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர். மன்னார் கல்விவலயப் பணிப்பாளர் எம். ஆபேல் ஹெம்வல் தலைமையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# அனர்த்தங்கள் பற்றிய தரவுகள் அபிவிருத்திக்கு அத்தியாவசியம்

## மட்டக்களப்பு அரச அதிபர்

மட்டக்களப்பு—

ஆவணப்படுத்துதல் என்பது எமது மாவட்டத்தைப் பொறுத்தவரை மிகமிக முக்கியதேவையாகவுள்ளது. காலம் காலமாக மாறிமாறி வரும் அனர்த்தங்கள் பற்றிய தரவுகளைச் சேகரிப்பது எமது எதிர்கால சந்ததியின் அபிவிருத்திக்கு மிகமிக அத்தியாவசியமாகின்றது. இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் எஸ்.புண்ணியமூர்த்தி தெரிவித்தார்.

மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் இடம்பெற்ற 'சுனாமி பேரழிவு' எனும் நூல் வெளியீட்டுவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நிகொட் நிறுவனப் பணிப்பாளர் சிறிதரன் தலைமையில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் -

மக்கள் ஒரு நிலைப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றார்கள். ஆயினும், நலன்புரி நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் எந்தவித பாரபட்சமுமின்றி, தேவைகள் உள்ள இடங்களை இனங்கண்டு அந்தப் பகுதிகளிலே தங்களது சேவைகளை வழங்கி வந்தனர்.

எனவே, இத்தகைய நிலைகளைக் கருத்திற்கொண்டே அதிகாரிகளும், நிறுவனங்களும் செயற்பட்டு தமது வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

# லெப்.கேணல் மறவன் பயிற்சிப் பாசறையிலிருந்து ஒன்பதாவது கடற்படை அணி வெளியேறியது!

கிளிநொச்சி—

லெப்.கேணல் மறவன் பயிற்சிப் பாசறையிலிருந்து தமிழீழ கடற்படையின் 9 ஆவது துணைப்படையினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை பயிற்சிகளை நிறைவு செய்தனர்.

வடமராட்சி கிழக்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்குப் பயிற்சி நிறைவு நிகழ்ச்சி நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் வடமராட்சி கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் இசையூரான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் -

பொதுச்சுடரை வடமராட்சி கிழக்குப் பிரதேச கடற்புலிகளின் மூத்த உறுப்பினர் குகன் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக்கொடியை யாழ்.மாவட்ட கடற்புலிகளின் நிர்வாகப் பொறுப்பாளர் செஞ்சேரன் ஏற்றிவைத்தார்.

மறவன் மாஸ்டரின் திருவுருவப் படத்துக்குத் தமிழீழ காவல்துறையின் வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர் சுகீதன் மலர் மாலை அணிவித்தார்.

நிறைவுரையைத் தமிழீழக் கடற்படையின் தளபதிகளில் ஒருவரான விநாயகம், மூத்த உறுப்பினர் மோகன் ஆகி யோர் நிகழ்த்தினர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டம் மணலாறிலுள்ள லெப். கேணல் திருவடி பயிற்சி நிலையத்தில் 125 பேர் கொண்ட 5ஆம் அணியினருக்கான பயிற்சி நிறைவு நிகழ்ச்சி நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு நடைபெற்றது.

தட்சணாமூர்த்தி மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை தளபதி மங்களேஸ் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை கடற்புலிகளின் மூத்த தளபதி விநாயகம் ஏற்றிவைத்தார்.

பயிற்சி முடித்த துணைப் படையினருக்கான பரிசில்களை தளபதிகள் மங்களேஸ் மற்றும் விநாயகம் ஆகியோர் வழங்கினர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில்

# சுனாமியால் வீடுகளை இழந்தவர்களுக்கு இரண்டரை லட்சம் ரூபா செலவில் வீடுகள்

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் வீடுகளை இழந்தவர்களுக்கு ஒரு குடும்பத்துக்கு இரண்டரை லட்சம் ரூபா வீதம் வீடுகள் கட்டுவதற்கு நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி ஜயசுந்தர முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபருக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

இந்த மாவட்டத்தில் 5 ஆயிரத்து 500 குடும்பங்கள் சுனாமியால் வீடுகளை இழந்துள்ளனர். கரையோரத்தில் வசித்தவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

அதேவேளை இந்த மாவட்டத்தில் சுனாமி வேலைத் திட்டங்களை மேற்கொள்ளும் அரச சார்பற்ற நிறுவனங்களுடைய பணிகள் மந்தகதியிலேயே நடைபெற்று வருவதாக மாவட்ட அரச அதிபரின் மாதாந்த அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

இதேவேளை, சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தையும், பதிவாளர் அலுவலகத்தையும் புதிதாக அமைப்பதற்கு பொது நிர்வாக அமைச்சு முதல் கட்ட நிதியாக 50 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

முதல்கட்ட ஒதுக்கீடாகவே இந்த நிதி கிடைத்துள்ளதாகவும், வேலைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறி வுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளருக்கு செஞ்சிலுவை சங்கத்தினால் வலைகள்

வடமராட்சி கிழக்கு—

வடமராட்சி கிழக்குப்பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 340 கடற்தொழிலாளர்களுக்கு 40 ஆயிரம் பெறுமதியான 340 வலைத்தொகுதிகளைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழு கடந்த சனிக்கிழமை வழங்கியது.

இந்த நிகழ்வு வடமராட்சி கிழக்குக் கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசப்பணிமனையில் வைத்து சமாசத்தலைவர் மு.தங்கவேலுவால் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. இதற்கு முன்னரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழு இரு தடவைகள் 40 ஆயிரம் பெறுமதியான வலைத் தொகுதிகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் அங்கத்துவ சங்கங்களின் பிரதிநிதிகள், சமாசப் பிரதிநிதிகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வடமராட்சி கிழக்கு பிரிவு பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (21)

# நிரந்தரமான வீடமைப்புத் திட்டம்

மன்னார்—

மன்னார் வாழ்வோதய நிறுவனம் மீளக்குடியேறியவர்களுக்காக நிரந்தர வீடுகளை அமைத்து வருகிறது. இதற்கமைய 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் 125 குடும்பங்களுக்கு மழவராயர் கட்டையடம்பன் கிராமத்தில் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இந்த வீடமைப்புத் திட்டத்தின் பணிகள் விரைவில் ஆரம் பிக்கப்படவுள்ளதாக வாழ்வோதய நிறுவனத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

# தற்காப்புப் பயிற்சி

வட்டக்கச்சி—

உருத்திரபுரம் பிரதேச மக்களுக்கான தற்காப்புப் பயிற்சி கடந்த வாரம் சிவநகர் பாடசாலை வளாகத்தில் பிரதேசப் பொறுப்பாளர் சுடர்விழியன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை மாவீரரின் தந்தையான சண்முக ராஜா சந்திரகுலதேவி ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசிய கொடியை இரண்டு மாவீரர்களின் தந்தையான கந்தசாமி ஏற்றிவைத்தார்.

ஈகச் சுடரை மாவீரரின் தந்தை முருகேசு ஏற்றிவைத்தார். இந்தத் தற்காப்புப் பயிற்சியில் பெருமளவான பொது அமைப்புகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# ஆபாசப் படங்களை வைத்திருப்பவர்கள் மீது தமிழீழ காவற்துறையினர் சட்ட நடவடிக்கை

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமுதாய சீரழிவுகளை ஏற்படுத்தும் வகையில் ஆபாசப் படங்களை வெளியிடவோ, வைத்திருக்கவோ வேண்டாமென தமிழீழ காவற்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அண்மையில் பல இடங்களில் இந்த ஆபாச சித்திரக் கலண்டர்கள், படங்கள், சுவரொட்டிகள் என்பன தமிழீழ காவற்துறையினரால் மீட்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இந்த வேண்டுகோளை மீறி கலாசார சீரழிவுகளை ஏற்படுமாறு செயற்பாடுகளை செய்பவர்கள் இனங்காணப்பட்டால், அவர்களுக்கெதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தமிழீழ காவற்துறையினர் தெரிவித்தார்.

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மாணவர்களுக்கு கல்விப்போதனை

வடமராட்சி கிழக்கு—

வடமராட்சி கிழக்கு, பருத்தித்துறை செஞ்சிலுவைச் சங்க பிரிவுகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 12 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கணனி, ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களை மாலை நேரங்களில் கற்பிப்பதற்கு ஜப்பான் செஞ்சிலுவைச்சங்கம்- ஜப்பானிய இளைஞர் நட்புறவுச் சங்கத்தின் ஊடாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைக்கு நிதி உதவி வழங்கியுள்ளது.

வடமராட்சி கிழக்கு, பருத்தித்துறைப் பிரிவுகளில் 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு, கல்விப் போதனை நடத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை, வடமராட்சி கல்வி வலயத்துடன் மேற்கொண்டுவருகின்றது. (21)



நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத வீதியைப் புனரமைப்புச் செய்வதில் ஈடுபட்டுள்ள வன்னேரிப் பிரதேச மக்களைப் படத்தில் காணலாம். *படம் - வன்னேரிச் செய்தியாளர்.*

# சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினரால் பாடசாலை மாணவர்களுக்கு பாதணிகள்

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மட்டக்களப்பு வால்கட்டு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களுக்குப் பாதணிகள் வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.கிருஸ்ணானந்தமூர்த்தி தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பட்டிப்பளைப் பிரதேசக் கோட்டக் கல்வி அதிகாரி நா.தயாசீலன், மட்டக்களப்பு பண்டாரியாவெளி பாடசாலை அதிபர் த.அருள்ராஜ் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். இதில் பாடசாலையில் கல்வி பயிலும் ஆண், பெண் சகல மாணவர்களுக்குரிய பாதணிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக கலந்துகொண்ட கோட்டக் கல்விப் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில்-

இந்தப் பாடசாலை மாணவர்களின் கற்பித்தல் செயற்பாடுகளில் பெற்றோர்கள் பங்கெடுக்க வேண்டும். கல்வித் திணைக்களத்தால் இலவசமாக புத்தகம், சீருடை, கொப்பிகள் போன்ற அனைத்து பொருட்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றபோதிலும், தற்போது சில நிறுவனங்களின் உதவியுடன் பாதணிகளும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இந்த விடயத்தில் பெற்றோர்களும், முக்கியமாக தங்கள் பிள்ளைகளின் கல்வியில் பங்கெடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

நமது ஈழநாடு

வைர வரிகள்

இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்.

- திருக்குறள் -

## நமது நோக்கு

# பம்மாத்து மாநாடுகள்

ஜெனிவாவில் போர்நிறுத்த அமுலாக்கம் குறித்து விடுதலைப் புலிகளுடன் நடத்தவுள்ள பேச்சுக்கள் தொடர்பாக ஆராய சர்வகட்சி மாநாட்டை அரசாங்கம் கூட்டியிருக்கிறது.

புலிகளுடனான பேச்சுத் தொடர்பாக ஏற்கனவே இரண்டு தடவைகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி ஆராய்ந்து விட்டார். இப்போது ஜெனிவாவில் என்ன பேசுவது என்பது பற்றி ஆராயப் போகிறாராம்.

அனைத்துக்கட்சிகளுடனும் இணக்கப்பாடு கண்டு இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்னெடுப்பது என்பது தான் இந்த சர்வகட்சி மாநாட்டுக்கு அரசு கூறும் காரணம். ஆனால், இந்த சர்வகட்சி மாநாடுகள் என்பது காலத்துக்குக்காலம் சிங்கள அரசுகளால் தமிழ் மக்களை ஏமாற்றவே பயன்படுத்தப்பட்டதென்பது இங்கு நினைவில் கொள்ளத்தக்கது.

அதாவது, புலிகளுடன் பேச்சுக்களைத் தொடங்கி விட்டு - அதை ஆக்கபூர்வமாக முன்னெடுக்கத் திராணியற்ற கட்டங்களில்தான் அரசாங்கங்கள் இத்தகைய சர்வகட்சி மாநாடு, வட்ட மேசை மாநாடு என்றெல்லாம் ஏமாற்று வார்த்தைகளைக் கட்டவிழ்த்து விடுவது வழக்கமாகும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் காலத்திலிருந்து பிறேமதாஸ, சந்திரிகா, இப்போது மகிந்த ராஜபக்ஷ என எல்லா சிங்களத் தலைவர்களுமே இந்த ஏமாற்று வித்தைகளை நன்கு கற்றுக்கொண்டிருக்கின்றனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு தெற்கில் ஒருமித்த கருத்தை உருவாக்குதல் சாத்தியமில்லை என்பதை சிங்களத் தலைமைகள் நன்கு புரிந்து வைத்திருக்கின்றன.

ஏதோ, சமாதானத்தை நிலைநாட்டுவதாகக் கூறிக் கொண்டு ஆட்சிக்கு வரும் இவர்கள், தம்மால் எதுவுமே செய்ய முடியாது என்ற கட்டத்துக்குள் தள்ளப்படும்போது தான் இப்படிப்பட்ட ஒருமித்த கருத்தை உருவாக்கும் திட்டங்களை முன்வைப்பது வழக்கமாகிவிட்டது.

இந்தக் கருத்து ஒருமைப்பாடு என்பது - அனைத்துக் கட்சிகளினதும் ஒரே கருத்து என்று பொருள்படுமா? அல்லது அனைத்து இன மக்களது கருத்து என்று பொருள்படுமா? என்று தெரியவில்லை.

அனைத்துக் கட்சிகளுக்கும்தான் கருத்து ஒருமைப்பாடு ஏற்படுத்த முயற்சிகள் எடுத்துவருவதாகக் கூறப்படுவது முற்றிலும் அபத்தமானதொன்றாகும்.

இனப்பிரச்சினை தொடர்பாக மகிந்த ராஜபக்ஷவாலோ அல்லது வேறெந்த அரசியல் தலைமையினாலோ -அனைத்துக் கட்சிகளிடத்திலும் ஒருமித்த கருத்து ஏற்படுத்தப்படுவது இந்த யுகத்தில் சாத்தியமேயில்லை.

ஐ.தே.கவும், சுதந்திரக் கட்சியும் காலத்துக்குக் காலம் தமது நிறங்களை மாற்றிக்கொண்டு வந்தாலும்-சிவப்புச் சட்டைக்காரர்களான ஜே.வி.பியோ, மஞ்சள் உடை ஹெல உறுமயவோ ஒருபோதும் தமிழர் விரோதப் போக்கிலிருந்து மாறப்போவதில்லை.

இப்படிப்பட்ட நிலைமையில் எப்படி சர்வகட்சி மாநாட்டினூடாக ஒருமித்த கருத்தை உருவாக்க முடியும்? சர்வகட்சி மாநாட்டுத் தீர்மானங்களின் அடிப்படையில் பேச்சுக்களை நடத்துவதென்பது தனது தலைமைக்குப் பாதுகாப்பானதென ஜனாதிபதி மகிந்த கருதுகிறார்.

ஆனால், மகிந்தவின் பாவங்களில் தாம் பங்கு போட்டுக் கொள்ள வேறெந்த கட்சியும் முன்வரப்போவதில்லை.

1985 இல் திம்புப் பேச்சுக்களின் பின்னர் - ஜே.ஆர் வட்டமேசை மாநாடு என்று இழுத்தடித்தார். 1990 இல் புலிகளுடனான பேச்சுக்களின் போது, பிறேமதாஸ சர்வகட்சி மாநாட்டைக் கூட்டினார். 1994/95 இல் சந்திரிகாவும் இப்படி சர்வகட்சி மாநாட்டைக் கூட்டினார். எல்லாமே பேச்சுகளை இழுத்தடிக்கத்தான்.

பேச்சுவார்த்தை என்பது நெருக்கடியான விடயங்களுக்குள் சென்று, அரசு விட்டுக்கொடுத்து செயற்பட வேண்டிய சூழல் உருவாகிறது என்றவுடன் காலத்துக்குக் காலம் சிங்கள அரசியல் தலைமைகள் செய்யும் சூழ்ச்சி தான் இது.


ஆனால் ஒன்று, இப்போது மகிந்த முன்கூட்டியே - தான் பொறியில் விழாமல் இருப்பதற்காக சர்வகட்சி மாநாடு என்ற கவசத்தைப் பயன்படுத்தப் பார்க்கிறார். சர்வவல்லமையும் கொண்ட ஜனாதிபதியான இவரால் துணிந்து முடிவெடுக்க முடியாத நிலை இருப்பது இதிலிருந்து வெளிப்படுகிறது.

அனைத்துக் கட்சிகளுடனும் இணக்கப்பாடு கண்டு, புலிகளுடன் பேச்சுநடத்தி - நியாயமான தீர்மானங்களை எடுப்பதற்குள் தனது பதவிக்காலம் பாதுகாப்பாகக் கழிந்து விடுமெனக் கருதுகிறாரோ தெரியவில்லை.

ஆனால், நிச்சயம் மகிந்தவின் இந்தப் பம்மாத்து மாநாடுகள் நீண்டகாலம் தாக்குப்பிடிக்கப் போவதில்லை என்பது உறுதி.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




# வடமுனைத் தாக்குதல் குறித்து கண்காணிப்புக்குழுவிடம் புகார்!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் எல்லைகளை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட புதிய தலைவருக்கு தெரியப்படுத்துவது தொடர்பான சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது.

கரடியனாறு - தேனகத்தில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பில் - விடுதலைப் புலிகள் சார்பாக மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு, மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் தயாமோகன், திட்டமிடல் மேம்பாட்டுச் செயலகப் பொறுப்பாளர் மனோஜ் மற்றும் மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உள்ளிட்ட பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் வடமுனையில் அண்மையில் இராணுவத்தினர் மற்றும் துணைப்படைகளால் நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படவில்லை.

எங்கள் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் படையினரும், துணைப்படையினரும் ஊடுருவித் தாக்குதல் நடத்தியது போர்நிறுத்த உடன்பாட்டை மீறும் செயல். இதற்கு உரிய விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் விடுதலைப் புலிகளால் வலியுறுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

## பாதுகாப்பு நிலையம் அமைத்தும் சைக்கிள் நிறுத்த முடியாத நிலை!

நெல்லியடி

நெல்லியடி பொதுச்சந்தையில் கடந்த காலங்களில் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் கொட்டகை அமைக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்ததாக 'நமது ஈழநாடு' பத்திரிகையில் செய்தி வெளிவந்ததையடுத்து உரியவர்களால் மக்களின் தேவை கருதி கொட்டகை அமைக்கப்பட்டது.

இருந்தபோதும், இந்தப் பாதுகாப்புக்கான கொட்டகை வீதிக்கு அருகாமையில் அமைக்கப்பட்டிருப்பதால், கொட்டகைக்குள் சைக்கிள்களை நிறுத்துவதற்கு இராணுவத்தினர் தடை விதித்துள்ளனர். இதனால் மீண்டும் மக்கள் தமது சைக்கிள்களை வெயிலிலும், மழையிலும் நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் அந்தப் பகுதி மக்கள் பெரும் விசனம் அடைந்துள்ளனர்.

இந்தக் கொட்டகை பொதுச்சந்தையின் உட்புறத்திலேயே அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (12)

## ஆசிரிய கலாசாலை மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம்

பலாலி ஆசிரிய கலாசாலையின் பழைய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் இன்று பலாலி ஆசிரிய கலாசாலையில் வைத்து வழங்கப்படவுள்ளது.

பலாலி ஆசிரிய கலாசாலையில் 1999, 2000, 2001 கல்வி ஆண்டுகளில் தமது கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ்களின் மூலப்பிரதியே பரீட்சைத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதனை உரியவர்கள் உடனடியாக பெற்றுக் கொள்ளுமாறு பலாலி ஆசிரிய கலா சாலை அதிபர் கு.சதாசிவமூர்த்தி தெரிவித்தார். (12)

## பழைய மாணவருக்கான பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்

பலாலி ஆசிரிய கலாசாலையின் பழைய மாணவர்களுக்கான வருடாந்த பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் கு.சதாசிவமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு பலாலி ஆசிரிய கலாசாலையின் பழைய மாணவர் சங்கச் செயலாளர் பத்மராஜா தெரிவித்தார். (12)

## தெருச்சண்டித்தனம் புரிந்தவர் கனடாவிலிருந்து நாடு கடத்தல்!

றொறன்ரோ

கனடா - றொறன்ரோவில் பிரபல தெருச்சண்டியனாகத் திகழ்ந்த ஒருவர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார். ஜெயசீலன் துரைசிங்கம் என்பவரே இவ்வாறு நாடு கடத்தப்பட்டார்.

சுமார் 17 வருடங்களுக்கு முன்னர் - 1989 ஆண்டு கனடாவுக்குச் சென்ற இவர் சோலப்பூ என்ற தெருச்சண்டை குழுவை நடத்தி வந்தார்.

முன்னாள் புளொட் உறுப் பினரான இவர் இந்தியாவில் ஆயுதப் பயிற்சி எடுத்திருந்தார்.

கனடாவில் தெருச்சண்டைகளில் ஈடுபட்டு வந்த 1,050 தமிழ் இளைஞர் களை கைதுசெய்துள்ளதாகவும், கனடா பொலிஸாரின் தொடர் விசாரணைகளையடுத்து இவர்கள் நாடு கடத்தப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களும் தற்போது நாடு கடத்தப்பட்டவரும், கனடா நாட்டு வதிவிட உரிமை பெற்ற அந்த நாட்டு கடவுச்சீட்டு உடையவர்கள் என்றும் தெரியவருகிறது.

இவர்கள் தாங்கள் செய்துவரும் குற்றங்களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கும், நாடுகடத்தப்படாமல் இருப்பதற்கும் - இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டால் தம்மை இலங்கை படையினர் கொன்று விடுவார்கள் என்ற மாயைத் தோற்றத்தை உருவாக்க தம்மை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று பொலிஸாரிடம் கூறிவருவதாக கனடா பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

## யாழ். குடாநாட்டு மக்கள் இடம்பெயரவில்லையாம்!

யாழ்ப்பாணம்

யாழ். மாவட்டத்திலிருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி இடம்பெயர்வதாக வெளிவரும் செய்திகள் தவறானவை என்று படைத்தரப்பு கூறியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வாழும் மக்கள் வன்னிப் பகுதிக்குச் செல்வதாக விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் பிரசாரத்தில் எதுவித உண்மையும் கிடையாது என பலாலி படைத்தரப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் நிரந்தரமாக வதியும் மக்கள் வன்னிக்கோ, வேறெந்தப் பகுதிக்கோ இடம்பெயர்ந்து செல்லவில்லை. அங்கு மீளக்குடியமர்ந்த சிறு தொகையினரே வன்னிக்குச் செல்கிறார்கள்.

அநேகமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னைய அங்கத்தவர்களதும், ஆதரவாளர்களதும் குடும்பங்களே இவ்வாறு இடம்பெயர்வதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒக்ஸ்பாம் நிறுவனத்தால் படகுத் தொகுதிகள் வழங்கப்படவுள்ளன

வடமராட்சி

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 10 கடற் தொழிலாளர்களுக்கு ஒக்ஸ்பாம் நிறுவனம் 10 படகுத் தொகுதிகளை வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக எதிர்வரும் 6 ஆம் திகதி வழங்கவுள்ளது.

இதற்கு முன்னரும் ஒக்ஸ்பாம் நிறுவனம் பாதிக்கப்பட்ட இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 10 பயனாளிகளுக்கு 10 படகுத் தொகுதிகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (21)

# தேசியத் தலைவர் வெளிப்படுத்திய அதிர்ச்சித் தகவல் என்ன?

**புலிகளின் குரல் வானொலியில் அரசியல் அரங்கம் நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்திய உரை -**

தற்போது தேசியத் தலைவர் எடுத்திருக்கும் முடிவுகள் நீண்ட காலத்தின் இந்தத் தீவில் அதிர்ச்சியூட்டக் கூடிய விளைவுகளை ஏற்படுத்தும் என்று சொல்லியிருந் தோம்.

குளத்தின் நடுவிலே கல்லைப் போட்டால் அந்தக் குளத்தில் எழுகின்ற அலைகள் எப்படி விரிந்து பரந்து செல்கிறதோ அதைப் போல -

இந்த சுனாமி அலையினது தாக்கம் போல -

தலைவரது இந்த முடிவானது சிறு சிறு வட்டங்களாக உருவாகி பெரிய வட்டங்களாகப் பல்கிப் பரவி மிகப் பெரிய தாக்கத்தை இந்தத் தீவில் ஏற்படுத்தப் போகிறது.

எங்களைப் பற்றி யார் எது சொன்னாலும் எங்களுக்குப் பரவாயில்லை. நாங்கள் மிகத் தெளிவாக அமைதியின் பெயரில் உள்ள பற்றுதலை மீண்டும் சந்தேகத்துக்கிடமின்றி இந்த உலகத்துக்கு நிரூபித் துக் காட்டியிருக்கிறோம். நாங்கள் மனப்பூர்வமாக அமைதியை விரும்புகிறோம். உண்மையான மனமாற்றத்தை சிங்களத் தலைவர்களிடம் நாங்கள் எதிர்பார்க்கிறோம். இன்றும் அதற்காக காத்திருக்கத் தயாராக இருக்கிறோம்.

## புலிகளின் -பாசித்தாள்' பரிசோதனை

போர் செய்ய வேண்டிய நிலையிலும் கூட-

போருக்கான நியாய காரணங்கள் எங்கள் பக்கம் இருக்கும் நிலையிலும் கூட -

நாங்கள் போர் செய்வதைத் தவிர்த்து இன்னும் ஒரு வாய்ப்பை மகிந்தவுக்குக் கொடுப்பதற்காக முன் வந்திருக்கிறோம்.

எங்களுடைய இந்தப் பெறுமதியை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நாங்கள் ஒரு பரிசோதனையை மேற்கொண்டிருக்கிறோம்.

மூலகங்களின் உண்மையான நிறங்களை அறிவதற்காக மேற்கொள்ளப்படுகிற பாசித்தாள் பரிசோதனை போல, போர் நிறுத்த அமுலாக்கம் என்ற நிலைப்பாடாகிய பாசித்தாளைப் பயன்படுத்தி இருக்கிறோம் என்பதை மகிந்தவுக்கும், சிங்களத் தலைமைகளுக்கும் மட்டுமன்றி சர்வதேசத்துக்கும் தெரியப்படுத்துகிறோம்.

## போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது எப்படி?

நாம் 2002 ஆம் ஆண்டு நிகழ்வுகளை நினைவில் கொள்வோம்.

2001 ஆம் ஆண்டு யூலை 24 ஆம் திகதி கட்டுநாயக்க விமான தளத்தை நாங்கள் அழித்ததற்குப் பின்னால் சிங்கள அரசு தறிகெட்டு திக்குத் திசை தெரியாமல் ஒரு நிலைப்பாட்டை மேற்கொண்டது. அதன் விளைவாக அமைதிக்கான வாய்ப்பு ஒன்று தோன்றியது. அதனடிப்படையில் தேசியத் தலைவர் நிலைமைகளைச் சரியாகக் கணக்கிட்டு 2001 ஆம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் திகதி தானாகவே முன்வந்து போர் நிறுத்தத்தை அறிவித்தார். அதைத் தொடர்ந்து சங்கிலித் தொடராக நடந்த பல நிகழ்ச்சிகளையும் நீங்கள் அறிவீர்கள்.

இந்தத் தீவில் முதல் முறையாகப் போர் நிறுத்த உடன்பாடு என்பது மிகப் பாரிய அளவில் தாக்கத்தை விளைவிக்கக் கூடியதாக உருவாக்கப்பட்டத்தையும் நீங்கள் அறிவீர் கள்.

நோர்வேத் தரப்பினர் இதில் தலையிட்டு முயற்சிகளை மேற்கொண்ட அந்தச் சூழ்நிலையை எங்கள் பாலா அண்ணையின் நூலில் ஒரு பந்திக்கூடாக எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

இருதரப்பும் ஏற்றுக்கொள்ளும் ஒரு ஆவணத்தைத் தயாரிப்பதற்காக நோர்வேயின் சமாதானத் தூதுவர்களான விதார் ஹெல்கிசன், ஜான் பீற்றர்சன், எரிக் சொல்ஹெய்ம் போன்றவர்கள் லண்டனில் என்னுடனும், இலங்கை அரசுப் பிரதிநிதிகளுடன் கொழும்பில் பல சுற்று கலந்துரையாடல்களை நிகழ்த்தினர்.

2002 ஆம் ஆண்டு ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் தலைவர் பிரபாகரனுடன் நான் பல முறை தொடர்பு கொண்டு அவருடன் கலந்தாலோசித்து, அவரிடமிருந்து பல திருத்தங்களையும், யோசனைகளையும், மாற்றங்களையும் பெற்று எமது தரப்பு ஆவணத்தை முழுமைப்படுத்தி நோர்வே அரசிடம் கையளித்தேன். நீண்ட வரலாற்றுப் பகைமை உடைய இருதரப்பினரும் இணங்கக் கூடிய ஒரு போர் நிறுத்த ஆவணத்தைத்தயார் செய்வதில் நோர்வே அனுசரணையாளர் கடைப் பிடித்த பொறுமையான, விடா முயற்சியான, மதிநுட்பமான பணியை நான் பாராட்டவேண்டும்.

அதற்கேற்ப 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும், ரணிலும் அந்த ஆவணத்தில் கைச்சாத்திட்டனர். அதற்கூடாக இந்த ஆவணம் வெளி உலகத்துக்கு அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைக்கு வந்தது. அந்த நேரத்தில் நோர்வே நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் சொன்னதை இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

60 ஆயிரம் மக்களைப் பலி கொண்டு பரந்துபட்ட அளவில் மனித அவலங்களுக்குக் காரணமாக இருந்த இந்த நெருக்கடிக்குச் சமரசப் பேச்சுகள் மூலம் தீர்வு காண்பதே இருதரப்பினரது இலட்சியமாகும்.

இந்த அதிகாரபூர்வமான போர் நிறுத்த உடன்பாட்டின் மூலம் பகை நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு இரு தரப்பினரும் உறுதி பூண்டுள்ளனர் என்ற வகையில் 1993 ஆம் ஆண்டில் பலஸ்தீனத் தரப்புக்கும், இஸ்ரேல் தரப்புக்கும் ஒரு உடன்பாடு ஏற்பட்ட போது உலகம் எப்படி மகிழ்ந்ததோ, அதற்கு சற்றும் குறைவிலா மகிழ்ச்சியோடு இந்தப் போர்நிறுத்த உடன்பாடு நடைமுறைக்கு வந்த நாளில் இந்த உலகம் மகிழ்ந்ததை இப்போது நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

## போர் நிறுத்த ஒப்பந்தத்தின் முக்கிய சரத்துக்கள் என்ன?

இந்தப் போர்நிறுத்தத்தின் முக்கிய சரத்துக்களை நினைவுபடுத்துகிறேன்.

யுத்த நிறுத்த நடைமுறைகளின் முதலாவது விதிக்கு இணங்க எந்தத் தரப்பினரும் எந்தவிதமான வலிந்து தாக்கும் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடக் கூடாது. இதனை நிறைவேற்ற சகலவிதமான இராணுவ நடவடிக்கைகளும் நிறுத்தப்படுதல் அவசியமாகும். நேரடியான மற்றும் மறைமுகமான துப்பாக்கிச் சூடுகள், திடீர்த் தாக்குதல்கள், பதுங்கித் தாக்குதல்கள் என்று விவரங்கள் விரிந்து சென்று கொண்டிருக்கின்றன.

## அடுத்த முக்கியமான செய்தி

'முதலாவது தரப்பின் 8ஆம் பகுதிக்கு அமைவாக தமிழ் துணை இராணுவக் குழுக்களை யுத்த நிறுத்தம் நடைமுறைக்கு வரும் நாளிலிருந்து 30 நாட்களுக்குள் இலங்கை அரசாங்கம் ஆயுதமற்றவர்களாக்கும்'. இதில் 30 நாட்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

'இந்த அணியில் உள்ள ஆட்களுக்கு இலங்கை அரசினது கட்டுப்பாட்டுக்குள்ளும், ஒழுங்கமைப்புக்குள்ளும் இணையும் வாய்ப்பை அளித்து வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அப்பால் பணிபுரியச் செய்யும்'.

அடுத்தது இராணுவத்தினரது வெளியேற்றம் தொடர்பானது -

'இரு தரப்பினரில் எத்தரப்பினரும் தமது பிடியில் வைத்திருக்கின்ற வணக்கத் தலங்களிலிருந்து யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் 30 நாட்களுக்குள் வெளியேறி பொதுமக்கள் செல்ல வழி செய்ய வேண்டும்'.

'உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் உள்ள வணக்கத் தலங்கள் பொது மக்களின் பாவனைக்குத் திறந்து விடாத பட்சத்திலும் கூட அனைத்து ஆயுதம் தரித்த ஆளணிகளும் வெளியேறி அவை பொதுப் பணியாளர்களால் நல்ல நிலையில் பேணப்பட வேண்டும்'.

'எந்தவொரு தரப்பினராலும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பாடசாலைக் கட்டடங்கள், இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் நாளிலிருந்து விடுவிக்கத் தொடங்கி அவற்றை பாவனைக்குக் கையளிக்க வேண்டும்.'

இப்படியாக சிலவற்றுக்கு 160 நாட்களும், சிலவற்றுக்கு 30 நாட்களுமாக யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக் கிறது.

இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துக்களை நடைமுறைப்படுத்துவதில் நாங்கள் மிகுந்த நெகிழ்ச்சியான போக்கைக் கடைப்பிடித்திருக்கிறோம் என்று அரசாங்கத்துக்கும், சர்வதேச சமூகத்துக்கும் மீண்டும் சொல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

## தேசியத் தலைவர் நடத்திய சந்திப்பில் வெளிப்பட்டிருக்கும் - அதிர்ச்சித் தகவல் என்ன?

இதைத்தான் தேசியத் தலைவர் நோர்வேத் தரப்பினருக்கு மிகவும் காத்திரமாகச் சொல்லியிருக்கிறார்.

இந்தப் போர்நிறுத்த ஒப்பந்த உடன்பாட்டை இல்லாது செய்தல் அல்லது மாற்றியமைத்தல் ஐரோப்பிய நாடுகளுக்கு புலிகளின் குழுக்கள் சென்று பேச்சுவார்த்தை நடத்துதலை முற்றாகத் தடுத்தல் ஆகியவை தான் மகிந்த ராஜபக்ஷவின் பதவியேற் புக்கு அடிப்படையாக அமைந்தது.

அதாவது இராஜதந்திர ரீதியாக நாங்கள் உருவாக்கிய வல்லாண்மைச் சமநிலையை இல்லாமல் செய்வதுதான் அவரது நோக்கம்.

இந்த வல்லாண்மைச் சமநிலை என்பது பொதுவாக நாடுகளிடையே ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு சட்ட ரீதியாக ஏற்கப்படுதல் என்பது.

நாங்கள் எங்களுடைய் தியாகத்தாலும், மாவீரர்களின் பேண்தகைமையாலும் ஒப்பந்தமே இல்லாத ஒரு வல்லாண்மைச் சமநிலையை நாம் உருவாக்கி இருந்தோம்.

அத்தகைய வல்லாண்மைச் சமநிலையைக் குலைப்பதற்கு மகிந்தவும் அவரது குழுவினரும் இந்த முயற்சிகளை மேற்கொண்டனர்.

எங்களுடைய சர்வதேச அங்கீகாரத்தைக் குறைத்து, எங்களுடைய வல்லாண்மைச் சமநிலையை மாற்றியமைக்க முற்பட்டுத்தான் போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக முதன் முதலில் மகிந்த முன்வைத்தார். நாங்கள் முன் வைக்கவில்லை.

பொறியை அவர்தான் எங்களுக்கு விரித்தார். போர் நிறுத்த ஒப்பந்தத்தை மாற்றியமைக்க முடியாது. அதை வலுப்படுத்தத்தான் முடியும் என்று எரிக் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அதை வழிமொழிகிற நிலைக்குத்தான் மகிந்த இப்போது தள்ளப்பட்டிருக்கிறார்.

நாங்கள் எமது வல்லாண்மைச் சமநிலையை மீண்டும் உறுதிப்படுத்தி எங்களுக்குப் படிப்படியாகக் கிடைத்து வரும் சர்வதேச அங்கீகாரத்தை மேலும் பேணுவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு தொடராகத் தான் இந்தப் பேச்சுவார்த்தை அமைந்துள்ளதே தவிர, சிங்களத் தரப்புச் சொல்வதைப் போல் வேறு எந்த வகையிலும் அமையவில்லை.

நாங்கள் முடிந்தளவுக்கு இந்தச் சிங்கள அரசை அம்பலப்படுத்திய பின்பும்- எங்களுக்குப் புரிய வில்லை, தெரியவில்லை என்று உலகம் சொல்லுமானால் அதையும் கேட்டுக் கொண்டு மீண்டும் நிரூபிக்க நாங்கள் தயாராகவே இருக்கிறோம்.

இன்று மிக முக்கியமான சந்தியில் இலங்கை அரசாங்கம் நிற்கிறது.

போர் நிறுத்த ஒப்பந்த சரத்துகள் பேணப்படாத நிலையிலும் கூட, போர் நிறுத்த மீறல்களுக்குக் காரணமான துணை இராணுவக் குழுக்களைச் சிங்கள இராணுவத்துக் கூடாக இயக்கி இத்தனை படுகொலைகளை யும் செய்த பின்பு, அதற்குப் பதிலடி கொடுத்த பின்னால் இன்று சிங்கள அரசு திரும்பவும் பழைய நிலைக்கு வந்துள்ளது. சிங்கள அரசு இப்போது 2002 ஆம் ஆண்டுக்குப் போய் நிற்கிறது.

சிங்கள அரசு இப்போது தனது இராணுவத்தின் மனவலிமையைப் பாதிக்கத்தக்க வகையிலான- படுகொலைக்கும், பழி வாங்கலுக்கும், மிகுந்த மிருகத்தனத்துக்கும் இலக்காகி இருக்கிற சிங்கள இராணுவத்தை- பக்குவமாகச் சொல்லி திருத்தி, துணை இராணுவக் குழுக்களை அகற்றி இராணுவத்தைச் சீரமைக்க முடியும் என்பது நடக்காத காரியம். ஏனெனில், இந்தச் செயற்பாடுகள் சிங்கள இராணுவத்தைக் கலைப்பதற்குச் சமமானது. ஆகவே, 'சிங்கள இராணுவத்தை யார் கட்டுப்படுத்தப் போகிறார்கள்? யார் கட்டுப்பாட்டிலே சிங்கள இராணுவம் இயங்குகிறது' என்ற புதிய செய்தி- இன்று உலகத்துக்குத் தெரியப் போகிறது.

இந்தக் கேள்விக்கு விடை காண்பதற்கான வாய்ப்பை, சந்தர்ப்பத்தை மகிந்தவுக்கு நாங்கள் கொடுத்திருக்கிறோம் என்பது அவருக்கு போகப் போக நன்றாகப் புரியும்.

ஆகவேதான், சிங்கள தேசத்துக்கு அதிர்ச்சியூட்டும் செய்தியாகப் படிப்படியாக எமது முடிவு அமையப் போகிறது என்று நாங்கள் சொல்கிறோம்.

அடுத்து மிக முக்கியமானது- எங்களை சர்வதேச ரீதியாக தரமிறக்கி- எங்களுக்குத் தடைவிதிக்க அவர்கள் எடுத்த அனைத்து முயற்சிகளையும் அவர்களாகவே முன்வந்து அப்படியானவற்றை இல்லாது செய்கிறார்கள்.

மகிந்த இன்று மகிழ்ச்சியாக இருக்கிறாராம். புலிகளோடு பேசுவது குறித்து மிகுந்த மனத்திருப்தியோடு இருக்கிறாராம்.

மகிந்த இப்படிச் சொல்வதன் மூலம் சிங்கள தேசத்தின் அனைத்து இனவெறியர்களுக்கும், பேரினவாதிகளுக்கும் சினமும் கொதிப்பும் ஏற்பட்டிருக்கிறது.

இதனது விளைவு என்னவா கும்? என்பதும் நாங்கள் சொன்ன அதிர்ச்சியலைக்குள்ளே காலப்போக்கில் சேரும் என்பதை நீங்கள் காண்பீர்கள்.

இதுவரை நாம் கூறியவை இந்தப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான எங்களது நிலைப்பாடு.

போர் நிறுத்தத்தை வலுவாக்குவதற்கான வாய்ப்பு தந்தமைக்கு நாங்கள் சிங்கள அரசுக்கு நன்றி சொல்கிறோம் என்பதுதான் எங்களது செய்தி.

## தமிழீழத் தேசத்தின் வெளிவிவகாரக் கொள்கை

இதுவரை நடந்த பேச்சுகளுக்கு ஊடாகவும், தலைவர் சந்தித்த அண்மைய சந்திப்புகளினூடாகவும் நாங்கள் ஒரு முக்கிய உருவாக்கத்தைச் செய்துகொண்டு வருகிறோம் என்பதை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம்.

தமிழீழ தேசத்தின் வெளிவிவகாரக் கொள்கை என்று சொல்லக் கூடிய ஒரு நிலைப்பாட்டினது தோற்றுவாய்களை நாங்கள் இப்போது உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

தேசியத் தலைவர் தனது செயற்பாட்டுக்கூடாக எல்லோரும் புரிந்து கொள்ளத்தக்கதாக எந்த அணியும் சாராத தமிழீழ தேசத்தினது புதிய தேசியக் கொள்கை - நிலைப்பாடு ஒன்று வெளிநாடுகள் தொடர்பாக உருவாகிக் கொண்டு வருவதை நாம் பார்க்கிறோம்.

நாட்டினது வெளிவிவகாரக் கொள்கையின் முக்கிய அம்சங்களான -



தேசிய நலனை முன்னெடுத்தல்.

அனைத்துலக உள்நாட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஏற்ற வகையில் தேசிய நலனை முன்னெடுக்கும் கொள்கையை வகுத்தல், தேசிய நலனை அடைவதற்காகப் பேச்சுவார்த்தைகளை உபாயமாகப் பயன்படுத்துதல் - போரை உபாயமாகப் பயன்படுத்தல், மிக வலுவுடன் சமமான நிலையில் நாங்கள் வெளிநாட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்ளல், எதிர்பார்க்காத பலனை இவை தராவிட்டால் மாற்று வழிகளைக் கையாள்தல்.

ஆகிய அனைத்து அம்சங்களுக்கும் அமைவாக நடந்த பேச்சுவார்த்தையே தலைவர் நடத்திய அண்மையப் பேச்சுவார்த்தை என்று நிச்சயமாகக் கூறுவேன்.

வியட்நாமிலே மிக நீண்டகாலமாகப் பேச்சும், போருமாக அந்தப் போராட்டம் நடந்தது.

இராணுவ பலத்துக்கு, வலிமைக்கு அடுத்தபடியாக இராஜதந்திர நடவடிக்கைகள் அங்கு மேற்கொள்ளப்பட்டது என்று வியட்நாம் போராட்டம் பற்றிச் சொல்வார்கள்.

அதேபோல் இராணுவ நடவடிக்கைகளின் இலக்குகளுக்கு அமைவாகவும், இசைவாகவும் இராஜதந்திர பேச்சுவார்தைகளும் மேற்கொள்ளப்பட்டது என்றும் சொல்வார்கள்.

## புலிகளின் இப்போதைய நிலைப்பாடு எது?

நாங்கள் மிகத் தெளிவாக, மனப்பூர்வமாக மகிந்தவுக்கு ஒரு வாய்ப்பை அளிக்கிறோம் - சிங்கள தேசத்துக்கு அளிக்கிறோம்.

நாங்கள் எதுவித கள்ளம் கபட மும் இல்லாமல், தெளிவாகச் சொல்கிறோம். "முன்னுக்கு வாருங்கள் பிரச்சினையைத் தீர்க்க மனமுவந்து எங்களோடு இணைந்து செயற்பட வாருங்கள்'' என்று வாய்ப்பைக் கொடுக்கிறோம்.

அப்படி அவர்கள் முன்வரக் கூடிய வாய்ப்பை நிரூபிப்பதற்காக -

போர் நிறுத்த உடன்பாட்டை மீண்டும் உயிர்ப்பித்து, நடைமுறைப் படுத்த நீங்கள் ஒப்புக் கொண்ட விடயங்களைச் செய்வதற்கு முன்வாருங்கள் என்று எல்லோரும் ஏற்கக் கூடிய மிக இலகுவான, நியாயமான வாய்ப்பையும் உலகத்துக்கும், மகிந்தவுக்கும் அளித்திருக்கிறோம்.

இந்த விடயங்களின் அடிப்படையில் தேசியத் தலைவரது அணுகு முறையைப் பார்க்க வேண்டும். போர், அமைதி, சண்டை, சமாதானம் என்று பார்க்காமல், ஒரு தேசத்தினது இரா ஜதந்திர உருவாக்கமாகத் தனது இலக்கை அடைவதற்கான சர்வதேச ரீதியான, சட்டரீதியான மாற்றங்களைப் கடைப் பிடிக்கும் தன்மையாகப் பார்க்க வேண்டும்.

உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாத நிலையில், புலிகளின் உறுதி மூல உபாயம் என்ன? இதற்கப்பால் இவையாவும் நிறைவேற்றப்படாத நிலையில், எங்கள் இயக்கத்தின் இறுதி மூல உபாயமாக எங்கள் மக்களின் அடிப்படை எண்ணங்களுக்கு ஏற்றவகையில், எங்கள் மக்களின் இறுதி விடுதலைப் போர் மேற்கொள்ளப்படும் என்பதையும் நாங்கள் மிகத் தெளிவாகத் தெரிவிக்கிறோம்.

ஆகவே, தேசியத் தலைவர் நடத்திய பேச்சுவார்த்தைகள் என் பவை எமது விடுதலைப் போராட்டத் தினது பல்பக்க பரிணாமத்தைப் புலப்படுத்தி, ஒரு படிநிலை வளர்ச்சியைக் குறிக்கிறது என்பதை நாம் தெரிவிக்கிறோம்.

# எதிர்காலத்துக்கு வழிகாட்டும் தலைவராக வைகோ உருவாகிக்கொண்டிருக்கிறார்!



## ஆர்.எம் வீரப்பன் புகழாரம்



சென்னை —

கருணாநிதிக்குப் பின்னர் எதிர்காலத்துக்கு வழிகாட்டும் தலைவராக வைகோ உருவாகிக்கொண்டிருப்பதாக எம்.ஜி.ஆர் கழகத்தலைவர் ஆர்.எம்.வீரப்பன் தெரிவித்தார்.

கவிஞர் முத்துலிங்கம் எழுதிய 'காற்றில் விதைத்த கருத்து' என்ற நூல் வெளியீட்டு விழா சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நூலை ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ வெளியிட, எம்.ஜி. ஆர் கழகத்தலைவர் ஆர்.எம்.வீரப்பன் பெற்றுக்கொண்டார்.

விழாவில் ஆர்.எம் வீரப்பன் பேசியதாவது:-

கவிஞர் வாலி பேசும்போது கவிஞர்களுக்கு அரசியல் தொடர்பாக தங்களுக்கு என்று சொந்தக்கருத்து இருக்கலாம். ஆனால், எல்லோராலும் பாராட்டப்படுவோராக இருக்கவேண்டும். அதுவே கவிஞர்களுக்கான இலக்கணம் என்று குறிப்பிட்டார். அந்தக் கருத்து கவிஞர்களுக்கு மட்டும் கிடையாது. சமுதாயத்துக்கும் பொருந்தும். மனிதர்களிடையே கருத்து வேறுபாடு, முகவேறுபாடு, கொள்கை வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், அவர்கள் மனிதர்களாக வாழ்கிறார்களா என்பதுதான் கேள்வி.

நான் கருணாநிதியோடும் செல்வேன், வைகோபின்னாலும் போவேன். மக்களுக்காகப் பாடுபடுபவர்கள் எங்கே இருந்தாலும் அவர்களோடு நான் செல்வேன். நான் வைகோவை அணு அணுவாக ரசித்துப் பார்க்கிறேன். அவர் தெளிவான பாதையில் சென்று கொண்டிருக்கிறார்.

கருணாநிதிக்குப் பிறகு எதிர்காலத்துக்கு வழிகாட்டுகின்ற தலைவராக வைகோ உருவாகிக்கொண்டிருக்கிறார். கருணாநிதிக்குப் பிறகு தமிழின் பெயரால் ஒரு புதிய எழுச்சியை உருவாக்கும் ஆற்றல் மிக்க தொண்டராக வைகோவைப் பார்க்கிறேன் என்று ஆர்.எம் வீரப்பன் தெரிவித்தார்.




இங்கு பேசிய வைகோ: -

இசை, மொழி பற்றியும் முத்துலிங்கம் எழுதியுள்ளார். பல புதிய ஆய்வுக் கருத்துக்களை கூறியுள்ளார். தலித் மக்களுக்காகப் பாடுபட்ட சவுந்தரபாண்டியனார் வரலாற்றை எழுதியுள்ளார். தமிழுக்கு அழிவே கிடையாது. உலகம் உள்ளவரை தமிழ் வாழும். அதற்குரிய இடத்தைப்பெற்றுத்தரும் வீரர்கள் வந்துகொண்டே இருப்பார்கள்.

தனி ஈழம் மலரும் என்று கவிஞர் கூறியிருக்கிறார். இந்த உணர்வு எல்லோரிடமும் பரவவேண்டும் என்று விரும்புகின்றேன். இருதரப்பினரிடையே அமைதிப்பேச்சுவார்த்தை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. அது வெற்றிகரமாக அமையட்டும்.

அதற்கு இந்தியாவும் துணை நிற்கட்டும். ஆனால், எந்தவிதத்திலும் இலங்கை அரசுக்கு உதவக்கூடாது. இனப்படுகொலை செய்துவரும் சிங்கள அரசுக்கு எந்தவித உதவியும் செய்யக்கூடாது என்று ஏற்கனவே வலியுறுத்தியிருந்தோம். இப்போதும் வலியுறுத்துகிறோம் என வைகோ தெரிவித்தார்.

முன்னதாக கவிஞர் முத்துலிங்கம் வரவேற்றார். விழாவில் கவிஞர் வாலி, பழ.நெடுமாறன், பேராசிரியர் பெரியார் தாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மருமகளை முதல்வராக்க முயற்சிக்கிறார் ராமதாஸ்

## நடிகர் ஆனந்தராஜ் ஆவேசம்



திண்டிவனம் —

புதுச்சேரியில் தனது மருமகளை முதலமைச்சராக்க ராமதாஸ் முயற்சி செய்து வருவதாக அ.தி. மு.க. பொதுக்கூட்டத்தில் நடிகர் ஆனந்தராஜ் தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகேயுள்ள எண்டியூரில் அ.தி.மு.கவின் சாதனை விளக்கப் பொதுக் கூட்டத்தில் நடிகர் ஆனந்தராஜ் பேசியதாவது:-


சினிமாவில் என்னை வில்லனாகப் பார்த்திருப்பீர்கள். நான் உண்மையாக வில்லன் இல்லை. சட்டசபையில் ஜெயலலிதாவின் புடவையைப் பிடித்திழுத்த துரைமுருகன்தான் உண்மையான வில்லன். இந்தக்கூட்டத்தில் பா.ம.கவினர் புகுந்து கலகம் செய்தனர். நாடு சுதந்திரம் அடைந்து பல வருடமாகிறது. ஆனால், கிராம மக்களுக்கு இன்னும் ராமதாஸ் சுதந்திரம் வழங்கவில்லை.

நான் பா.ம.கவினரால் பலமுறை பாதிக்கப்பட்டுள்ளேன். ராமதாஸ் தன்னுடைய குடும்பத்துக்காக அரசியல் நடத்துகிறார். முன்னர் ராமதாஸ் பேசும்போது நானோ என் குடும்பத்தினரோ அரசியலில் எந்தப் பதவிக்கும் வரமாட்டோம் என்று சொன்னார். அப்படி வந்தால் நடுவீதியில் கட்டி வைத்து சவுக்கால் அடியுங்கள் என்று கூறினார். இப்போது பதவியில் இருக்கும் அன்புமணி, தன் ராஜ், வேலு ஆகியோர் யார்? மக்களை ராமதாஸ் ஏமாற்றுகிறார்.

தன்னுடைய குடும்பத்தினருக்காக ராமதாஸ் அரசியல் நடத்துகிறார். புதுச்சேரியில் தன்னுடைய மருமகளை முதல்வராக்குவதற்கு முயற்சி எடுத்து வருகிறார். நான் புதுவையில் தான் இருக்கிறேன். அங்கு வரட்டும் நான் பார்த்துக் கொள்கிறேன். தி.மு.க தலைமையிலான கூட்டணி 7 கட்சிக் கூட்டணியல்ல. அது 7 கோட்டான்கள் கட்சி, 7 ஆண்கள் சேர்ந்து ஒரு பெண்ணை எதிர்க்க வருகிறார்கள். சிங்கம் எப்போதும் தனித்துத்தான் வரும். பன்றிகள்தான் கூட்டமாக வரும் என நடிகர் ஆனந்தராஜ் மேலும் தெரிவித்தார்.

# அ.தி.மு.கவை ஆட்சியிலிருந்து அகற்ற ஒருமித்த கருத்துடன் உள்ளோம்!

## தமிழக காங்கிரஸ் தலைவர் வாசன்



சென்னை —

தமிழகத்தில் தி.மு.க கூட்டணிக் கட்சிகள் அ.தி.மு.கவை ஆட்சியிலிருந்து அகற்றவேண்டும் என்ற ஒருமித்த கருத்துடன் உள்ளோம். எங்கள் கூட்டணியில் கருத்து வேறுபாடு இல்லை. வெற்றிபெறவேண்டும் என்ற நோக்கம் மட்டுமே உள்ளது.

தமிழக காங்கிரஸுக்கு எவ்வளவு தொகுதி, எந்தெந்தத் தொகுதி என்பதை சோனியா காந்தி முடிவு செய்வாரென தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவரும், அமைச்சருமான ஜி.கே வாசன் தெரிவித்தார். செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த வாசன்:-

கேள்வி:-திண்டிவனம் ராமமூர்த்தி கூட்டணி ஆட்சி வேண்டும் என்று பேசி வருகிறாரே?

பதில்:-சோனியா வழிகாட்டுதலின்படி தமிழக காங்கிரஸ் தெளிவான முறையில் செயற்படுகிறது. இந்தக் கட்சியில் தலைவர் முதல் தொண்டர் வரை சோனியாவின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் செயற்படுவார்கள்.

யாரையும் திருப்திப்படுத்துவது போல் செயற்படமாட்டார்கள்.

சோனியா தலைமையில் காங்கிரஸைப் பலப்படுத்துவதே எங்கள் நோக்கம். அதிலிருந்து மாறி யாரையும் திருப்திப்படுத்திப் பேசுவதை சோனியாவும், தமிழக காங்கிரஸாரும் ஏற்க மாட்டார்கள்.

கே:- காங்கிரஸ் சார்பில் போட்டியிட விரும்புகிறவர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்படுமா?

ப:- தேர்தல் தொகுதி அறிவிக்கப்பட்டதும் விண்ணப்பங்கள் வாங்கப்படும்

கே:- கூட்டணியிலிருந்து ம.தி.மு.க விலகுமா?

ப:-யூகங்களுக்கு பதில் சொல்ல இயலாது. எங்கள் கூட்டணியிலுள்ளவர்கள் ஒருமித்த கருத்துடன் செயற்படுவார்கள்.

கே:-காங்கிரஸ் எத்தனை தொகுதிகள் கேட்கும்?

ப:-எங்களுக்குத் தேவைப்படும் தொகுதிகளைக் கேட்போம்.


கே:-வீரப்பமொய்லி கூட்டணி ஆட்சி வேண்டும் என்று கூறியிருக்கிறாரே?

ப:-அவர் அப்படி சொன்னதாக வெளியான செய்தி தவறு. காலம் கனியும்போது காங்கிரஸ் ஆட்சிவரும்

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# சொந்தப் பணத்தில் கருணாநிதி மக்களுக்காக செலவழித்திருப்பாரா?

## கேள்வி எழுப்புகிறார் விஜயகாந்த்



திருச்சி —

நான் 15 ஆண்டுகளாக என் சொந்தப் பணத்தில் மக்களுக்கு உதவி செய்திருக்கிறேன். அதுபோல் தன் சொந்தப் பணத்தில் கருணாநிதி உதவி செய்திருப்பாரா என்று - திருச்சியில் நடந்த தேர்தல் பிரசாரத்தில் தே.மு.தி.க.தலைவர் விஜயகாந்த் ஆவேசமாகக் கேள்வி எழுப்பினார்.

புதியகட்சி தொடங்கிய நடிகர் விஜயகாந்த், தமிழகம் முழுவதும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார். திருச்சி மாவட்டத்தில் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்த அவர் நேற்றுமுன்தினம் காலை முதல் மதியம் வரை, திருச்சியிலுள்ள திருச்சி 1, 2 ஆகிய தொகுதிகளில் அவர் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டார்.

திருச்சியில் விஜயகாந்த் பேசியதாவது-

மக்கள் மத்தியில் எனது கட்சியின் தேர்தல் அறிக்கையை திரும்பத் திரும்பச் சொல்லிவருவதால், அரைத்த மாவையே திரும்ப அரைக்கிறார் விஜயகாந்த் என்று என்னைத் தாக்கி, தி.மு.க. ஆதரவு பத்திரிகையில் செய்தி வந்துள்ளது. தேர்தல் அறிக்கை என்பதை அனைத்து ஊர்களிலும் ஒன்றாகத்தான் சொல்லமுடியும்.

தி.மு.க. போல் ஒவ்வொரு ஊருக்கு ஒரு தேர்தல் அறிக்கையை என்னால் சொல்லமுடியாது. நான் ஒரு சக்தியாக உருவாகியிருப்பதால் தான், தி.மு.கவினர் பயந்து போய், என்னைப் பற்றித் தாக்கி பத்திரிகையில் எழுதி வருகின்றனர்.

தாக்கி எழுதுவதாலும், அவர்களின் குடும்பத் தொலைக்காட்சியில் என்னைப் பற்றி விமர்சனம் செய்வதாலும், நான் பயந்துவிடுவேன் என்று அவர்கள் நினைக்கின்றனர்.

நான் நடிக்கும்போதே அவர்களுக்குப் பயப்படமாட்டேன். இப்போதா பயப்படப்போகிறேன்? அவர்கள் என்னைப் பற்றித் தாக்கி எழுதுவதால்தான், அவர்களைப் பற்றி நான் பேசவேண்டியிருக்கிறது.

தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் தங்களின் தேவையை நிறைவேற்றிக் கொள்ளத்தான் அரசியலைப் பயன்படுத்துகின்றன. அவர்கள் மக்களுக்கு நன்மை செய்தது கிடையாது. அரசியல்மூலம் ஆயிரம்கோடி, இரண்டாயிரம் கோடி என்று சொத்துச் சேர்ப்பதிலும், ஆயிரம் ஏக்கர், ஐயாயிரம் ஏக்கர் என்று நிலங்களை வளைப்பதிலுமே அவர்கள் குறியாக உள்ளனர்.

நாட்டில் 76 சதவீதமான மக்கள் வறுமைக் கோட்டில் இருப்பதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அப்படிப் பார்த்தால் இவ்வளவு நாட்களாக ஆட்சியில் இருந்தவர்கள் மக்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று தேர்தல் ஆணைக் குழுவின் அறிக்கை உணர்த்துகிறது. நாட்டுக்கு அரசியல்வாதிகளால் எந்த முன்னேற்றமும் இல்லை.

நான் கடந்த 15 ஆண்டுகளாக மக்களுக்கு உதவிகள் செய்து வருகிறேன். அதுபோல், ஒருவருக்காவது தன் சொந்தப் பணத்தில் கருணாநிதி உதவி செய்திருப்பாரா? முதல்வர் பதவி எங்களுக்குத் தான் என்று இருகட்சிகளும் மாறிமாறி பேசி வருகின்றன.

ஆனால் அதை முடிவுசெய்ய வேண்டியது மக்கள் என்பதை அவர்கள் மறந்து விட்டனர். என்று விஜயகாந்த் மேலும் தெரிவித்தார்.

# தமிழக அரசுக்கு எதிரான பேரணி; 2 ஆயிரம் தி.மு.கவினர் கைது!

சென்னை —

சென்னையில் வெள்ள நிவாரண நெரிசலில் 42 பேர் பலியான சம்பவம் தொடர்பில் புரளியைக் கிளப்பிவிட்டதாக தி.மு.க.மாநகர சபை உறுப்பினர் தனசேகரன் கைதுசெய்யப்பட்டார். இது தொடர்பான வழக்கில் உயர்நீதிமன்றம் - தமிழக அரசுக்குக் கண்டனம் தெரிவித்தது.

இதையடுத்து தனசேகரனை விடுதலை செய்யக்கோரியும், முதலமைச்சர் ஜெயலலிதா, பொலிஸ் ஆணையாளர் நடராஜ் ஆகியோரைப் பதவி விலகக்கோரியும் - பொலிஸ் ஆணையாளர் அலுவலகம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக தி.மு.க. அறிவித்திருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்துக்கு பொலிஸ் அனுமதி மறுத்தது.

இதனால் எழும்பூரில் உள்ள தாளமுத்து நடராஜன் மாளிகை முன்பு தி.மு.க.வினர் கூடினார்கள். தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் மு.க.ஸ்டாலின், பொருளாளர் ஆற்காடு வீராசாமி ஆகியோர் அங்கு வந்ததும் ஆர்ப்பாட்டம் தொடங்கியது.

தமிழக அரசையும், பொலிஸ் ஆணையாளரையும் கண்டித்து கோஷம் எழுப்பினார்கள். பின்னர் அவர்கள் அங்கிருந்து ஆணையாளர் அலுவலகம்முன் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக ஊர்வலமாகச் செல்ல முயன்றனர்.

அவர்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்தி கைதுசெய்தனர். முதலில் தொண்டர்கள், நிர்வாகிகள் அணியணியாகக் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் வாகனத்தில் ஏற்றப்பட்டனர். கடைசியாக மு.க.ஸ்டாலின், ஆர்க்காடு வீராசாமி, மாவட்டச் செயலாளர்கள் - பலராமன், ஜெ.அன்பழகன், முன்னாள் அமைச்சர் சற்குணபாண்டியன், பரிதி இளம்வழுதி எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ.செங்கை சிவம், பகுதிச் செயலாளர் சுரேஷ்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கைதுசெய்யப்பட்டனர். 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைதானதாக தி.மு.கவினர் தெரிவித்தனர்.



கைதான அனைவரும் பொலிஸ் வாகனங்களில் ஏற்றப்பட்டு எழும்பூர்-திருவல்லிக்கேணியிலுள்ள திருமண மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மோட்டார் சைக்கிள் விபத்தில் வள்ளிபுனத்தில் 5 பேர் காயம்!



முல்லைத்தீவு —


பரந்தன்- முல்லைத்தீவு வீதியில் வள்ளிபுனம் 17ஆம் கட்டையில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட ஐந்துபேர் படுகாயமடைந்தனர்.

மேற்படி சம்பவத்தில் புதுக்குடியிருப்பிலிருந்து வந்த மோட்டார் சைக்கிள், வள்ளிபுனம் 17ஆம் கட்டையடியில் சென்று கொண்டிருந்த இன்னொரு மோட்டார் சைக்கிளை குறுக்குத் தெருவில் திரும்பிய வேளை பின்பக்கமாக மோதியது.

இந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பத்மநாதன் (வயது 30), அவரது மனைவி சுலோசனா (வயது 26), இவர்களது பிள்ளைகளான தனோஜன் (வயது4), சிந்துஜா (வயது 2) மற்றும் சி.வடிவேல் (வயது 50) ஆகியோரே படுகாயமடைந்தனர்.

இவர்கள் அனைவரும் உடனடியாக புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மோட்டார் சைக்கிள்களை ஓட்டி வந்தவர்களான பத்மநாதன், வடிவேல் ஆகிய இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர்.

# இரண்டு பொலிஸாருக்கும் விளக்கமறியல் நீடிப்பு!



கிளிநொச்சி —

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள இரண்டு பொலிஸாரையும் எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் 9 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான மன்னாரில் அனுமதியின்றி உள்நுழைந்ததாக மூன்று பொலிஸார் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் மீதான வழக்கு விசாரணைகள் கிளிநொச்சி தமிழீழ நீதிமன்றில் நடைபெற்று வந்தன. கடந்த 26 ஆம் திகதி பொலிஸாரில் ஒருவரை நல்லெண்ண முயற்சியாக தமிழீழ விடுதலைப் புலிகள் விடுதலை செய்தனர். ஏனைய இரு பொலிஸார் மீதான விசாரணை கிளிநொச்சி நீதிமன்றில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர் புனர்வாழ்வுக்...

மற்றும் முன்பள்ளி மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சிப்பட்டறையில் கலந்துகொள்வதற்காக ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மட்டக்களப்பு வாழைச்சேனையிலிருந்து இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினூடாக வவுனியா நோக்கிப் புறப்பட்டனர்.

நேற்று போரூட் நிறுவனம் கிளிநொச்சியில் நடத்தவிருந்த பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்வதற்காக நேற்றுமுன்தினம் கிளிநொச்சியை வந்தடைவார்கள் என எதிர்பார்க்கப்பட்டபோதும் இவர்கள் வரவில்லை என்பதால் இவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியபோதும் எந்தத்தகவலும் கிடைக்கவில்லை.

வெலிகந்தவில் நேற்று முன்தினம் வாகனத்தில் வந்த 15 தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்களில் 5 பேர் ஆயுதக்குழுவினரால் கடத்திச்செல்லப்பட்ட சம்பவம் போன்று இவர்களுக்கும் நடந்திருக்கலாமென தாம் கருதுவதாக தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் முன்பள்ளி இணைப்பாளர் பாண்டியன் தெரிவித்தார்.

# காஸ் விலை மேலும் உயர்வு

கொழும்பு —

வீட்டுப்பாவனைக்காக பயன்படுத்தப்படும் 13.5 கிலோ சமையல் காஸ் சிலிண்டர் ஒன்றின் விலை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் 120 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஷெல் காஸ் லங்கா நிறுவனம் தெரிவித்தது.

இதன்படி வீட்டுப்பாவனைக்கு பயன்படுத்தப்படும் சமையல் காஸ் ஒன்றின் புதிய விலை 1000 ரூபா ஆகும். உலக சந்தையில் காஸ் விலையேற்றம் காரணமாகவே காஸ் விலை அதிகரிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக ஷெல்காஸ் நிறுவனம் தெரிவித்தது.

மேற்படி விலை அதிகரிப்பு நுகர்வோர் அதிகார சபையின் அனுமதியுனேயே மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆனந்தசங்கரி...

இந்தக் கட்சி அமைப்பு தொடர்பான பேச்சுக்கள் ஆரம்ப நிலையில் இருப்பதாகவும் - இது ஆராய்வுக் கட்டத்திலேயே இருப்பதாகவும் தமிழ்க் குழு ஒன்றின் பிரமுகர் மேற்படி இந்திய பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்தவுள்ள சூழலில் - புலிகள் தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் இல்லை என்ற கோணத்தில் பிரசாரங்களை முன்னெடுப்பதே இந்தக் கட்சி உருவாக்கத்தின் நோக்கம் என்றும் - இதன் பின்னணியில் அரசாங்கமும், வெளிநாடு ஒன்றும் இருப்பதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

## துப்பாக்கிச்...

ஈடுபட்டிருந்தபோதே அடையாளம் தெரியாத நபர்களின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானார்.

படுகாயமடைந்த இவர் உடனடியாக திருகோணமலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

## பணியாளர்கள் கடத்...

சூழ்நிலையில் அனைத்துத் தரப்பினரும் பொறுமையும் அமைதியும் காக்கவேண்டும் என்றும் அமெரிக்கத் தூதரகம் மீண்டும் கேட்டுக்கொள்கிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பணியாளர்கள்..

என்றும் அரசு கூறியுள்ளது.

அதேவேளை, எவரும் பொலிஸாராலோ அல்லது பாதுகாப்புப் படையினராலோ கைதுசெய்யப்படவில்லை என்றும் அரசாங்கம் கூறியுள்ளது.

இது தொடர்பான தொடர்பு ஊடகச் செய்திகளையடுத்து கொழும்பில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவலகத்தில் இருந்து தகவல்களைப் பதிவுசெய்யுமாறு பொலிஸ் மா அதிபர், ஒரு புலனாய்வுக்குழுவுக்கு பணித்துள்ளார்.

நடந்ததாகக் கூறப்படும் இந்தச் சம்பவத்தின் உண்மைத் தகவல்களை அறிய பொலிஸார் ஒரு முழுமையான விசாரணையை நடத்துவர் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

## எந்த...

உறுப்பினர்களுடன் எயர் சீப் மார்ஷல் தியாகி பேச்சுக்களை நடத்தினார்.

இதன்பின்னர் இராணுவத் தலைமையகத்தில் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாவுடனும், கடற்படைத் தலைமையகத்தில் வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொடவுடனும், கூட்டுப்படைகளின் தளபதி அட்மிரல் தயா சந்தகிரியுடனும் இவர் பேச்சுக்களை நடத்தினார்.

இந்தச் சந்திப்புக்களின்போது இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக்கொள்வது தொடர்பாகவே அதிக அக்கறையுடன் ஆலோசனை நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

அவர் இந்தச் சந்திப்புக்களின் பின்னர் ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில் -

இந்திய - இலங்கை நாடுகளுக்கிடையிலான உறவு மிகவும் பலம் வாய்ந்த நிலையில் இருப்பதால் இந்த நட்பை மேலும் வலுப்படுத்தவேண்டிய அவசியமில்லை.

எப்படியாவது இரண்டு தரப்பினரது உறவுகளும் இலங்கை விஜயத்தின்மூலம் மேலும் பலப்படுத்தப்படும். எமது உறவை எந்தவகையிலும் மாற்றமுடியாது. பூகோள ரீதியாக வும், நீண்ட கலாசார, சரித்திர ரீதியாக வும் அமைந்துள்ள எமது உறவு நிரந் தரமானது என அவர் மேலும் தெரி வித்தார்.



வெலிக்கந்தவில் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் கடத்தப்பட்டது தொடர்பாக கண்காணிப்புக் குழுவினர் விசாரணை நடத்துகின்றனர்.

# சர்வதேச நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கிளிநொச்சி வருகை

கிளிநொச்சி —

சர்வதேச நிதிநிறுவனங்கள் மற்றும் உதவி நிறுவனங்களின் பிரதிநிதிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கிளிநொச்சிக்கு விஜயம்செய்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

உலக வங்கி வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட், ஆசிய அபிவிருத்தி வங்கியைச் சேர்ந்த அலைசான் றோபியோ, ஐ.நா. பதில் இணைப்பாளர் ஜெப்ரப்டிக், சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதி லூயிஸ் வல்டிவெகோ, ஆகியோர் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தவுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடனான இந்தச் சந்திப்பில்- வடக்கு-கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆராயப்படும் அதேவேளை சுனாமி மீள்கட்டமைப்பு தொடர்பாகவும் ஆலோசனை நடத்தப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

# அவசர நோயாளர்களுக்காக அம்புலன்ஸ் சேவைக்கு ஏற்பாடு!

யாழ்ப்பாணம் —

கடும் சுகவீனமுற்ற நோயாளர்களை - இரவு நேரங்களில் வீடுகளுக்குச் சென்று அம்புலன்ஸ் வாகனங்கள் மூலம் ஏற்றி வருவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சுகாதாரசேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்:-

கடும் சுகவீனமுற்ற நோயாளர்களை இரவு நேரங்களில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதில் தனியார் வாகனங்கள் பாதுகாப்பற்றுள்ளதால் பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ்.பாதுகாப்பு தலைமையகத்திடமிருந்து பின்வரும் வைத்தியசாலை அம்புலன்ஸ் வாகனங்களுக்கு இரவு நேரத்தில் மாத்திரம் வீடுகளுக்குச் சென்று நோயாளர்களை ஏற்றிவர அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கீழ் தரப்பட்ட தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தமக்கு அண்மையிலுள்ள வைத்தியசாலையின் அம்புலன்ஸ் சேவையைப் பெறலாம்.

மாவட்ட வைத்தியசாலை வல்வெட்டித்துறை 226 3530, மாவட்ட வைத்தியசாலை சாவகச்சேரி 222 8479, சுற்றயல்கூறு சங்கானை 222 5477, மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பளை 0602212614, மாவட்ட வைத்தியசாலை, ஊர்காவற்துறை 060223580, சுற்றயல்கூறு காரைநகர் 222 5556, கிராமிய வைத்தியசாலை வட்டுக்கோட்டை 060221 3582, ஆதாரவைத்தியசாலைபருத்தித்துறை 222 3261, 222 3262, கிராமிய வைத்தியசாலை மருதங்கேணி 060221 3580, கிராமிய வைத்தியசாலை வேலணை 060 2213570, சுற்றயல்கூறு அச்சுவேலி 226 3152

## கோப்பாய்...

தெரியப்படுத்தியதாகவும் அதனையடுத்து இந்த விடயம் தொடர்பாக கூட்டுப்படைத் தளபதி அட்மிரல் தயா சந்தகிரியிடம் இதுகுறித்து விசாரிக்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவித்தார். இந்தச் சம்பவத்தால் அந்தப் பகுதியில் அச்சநிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

# யாழ்.ஆதீன ஆணையாளராக வண.ஆனல்ட் நியமனம்



யாழ்ப்பாணம் —

தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீனத்தின் பிரதம பேராயரின் ஆணையாளராக வண.எஸ்.சி. ஆனல்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் 24.01.2006 தொடக்கம் நடைமுறைக்கு வருவதாக பிரதம பேராயர் கலாநிதி சுகர்ந்தர் அறிவித்துள்ளார்.

## நாணயமாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | ரூ 101.68 | ரூ 102.72 |
| ஸ்ரேலிங் பவுண் | ரூ 179.35 | ரூ 182.25 |
| யூரோ | ரூ 122.44 | ரூ 124.80 |
| சுவிஸ் பிராங் | ரூ 78.50 | ரூ 80.53 |
| அவுஸ்ரேலிய டொலர் | ரூ 75.71 | ரூ 77.68 |
| ஜப்பானிய யென் | ரூ 00.86 | ரூ 00.87 |

மத்திய கிழக்கு நாடுகளின் நாணயங்களின் சுட்டிய விலைகள்

| | |
|---|---|
| பஹ்ரேன் டினார் | ரூ 271.31 |
| குவைத் டினார் | ரூ 350.06 |
| ஓமான் றியால் | ரூ 265.63 |
| சவுதி றியால் | ரூ 27.27 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ரூ 27.84 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.02.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.